# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 04 வெள்ளிக்கிழமை (17-03-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:96


## பொலீஸ் - இராணுவ வாகன அணி மீது மட்டக்களப்பில் கிளைமோர் தாக்கு!

### பிரதம இன்ஸ்பெக்டர் உட்பட 6பொலீஸார் பலி! 10பேர் காயம்!!

மட்டக்களப்பு,மார்ச்17

மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் பொலீஸ் - இராணுவ வாகன அணி ஒன்றின் மீது நேற்று நண்பகல் 12.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் குற்றத்தடுப்புப் பணியக பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஆறு பொலீஸார் உயிரிழந்தனர்; மேலும் 10பேர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பிலிருந்து விடுமுறைக்குச் செல்லும் இராணுவ மற்றும் பொலீஸாரை ஏற்றிக்கொண்டு பொலநறுவை நோக்கிச் சென்ற வாகனத் தொடரணியே மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே சத்துருக் கொண்டானுக்கும் - பிள்ளையாரடிக்கும் இடையிலுள்ள வாவிக்கு அருகில் வைத்து தாக்குதலுக்கு இலக்கானது.

விடுதலைப்புலிகளால் வாவிக்கு அருகில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வாகனத் தொடரணியில் பொலீஸாரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவர் வகுப்பு பகிஷ்கரிப்பு

சாவகச்சேரி இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் நேற்றுக்காலை பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து மேற்படி கல்லூரி மாணவர்கள் நேற்று முழுநாளும் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை செல்வராஜா துஷ்யந்தன் என்ற இந்த மாணவன் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டார் என மற்றோர் தகவல் தெரிவித்தது.

(இ-7-117-31)

# நோர்வேயின் முயற்சிக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டம்!

## அரசுக்கு எதிராகக் கோஷம்

கொழும்பு, மார்ச்17

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வே அரசு முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நேற்று மாலை ஆர்ப்பாட்டப் பேரணியையும் கண்டனக் கூட்டத்தையும் கொழும்பில் நடத்தியது.**

இவற்றில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கானவர்கள் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் நோர்வே அரசுடன் நடத்தும் இரகசியப் பேச்சுக்களைக் கண்டித்தும -

அந்தப் பேச்சுக்களின் விவரங்களைப் பகிரங்கப்படுத்தும்படி கோரியும் -

நேற்று மாலை 3 மணியளவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மற்றுமொரு எலும்புக்கூடு மீட்பு

வவுனியா,மார்ச்17

கிளிநொச்சி மாவட்டம் - திருநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மலசலகூடக்குழியில் இருந்து நேற்று முன்தினம் இளம்பெண் ஒருவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

வீடு ஒன்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த வீட்டு உரிமையாளர்கள் இதனைக் கண்டெடுத்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த எலும்புக்கூடு அடையா

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். - கொழும்பு விமான சேவை

## 29ஆம் திகதி வரைக்கான டிக்கெட் விற்பனை பூர்த்தி

யாழ்ப்பாணம்,மார்ச்17

பலாலிக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் விமானத்தில எதிர்வரும் 29ஆம் திகதி வ்ரை பயணச்சீட்டுக்கள் விற்பனையாகிவிட்டதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

மரணச்சடங்கு போன்ற அவசர தேவைகளுக்குச் செல்ல வேண்டியவர்கள் மட்டும் அதற்கான ஆவணங்களுடன் காலை 8 மணிக்கு சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய பேச்சின் போது

## அரசு- ஐ.தே.க. இணைந்து மூவர் கொண்ட குழு அமைப்பு

கொழும்பு,மார்ச்17

அரசுத் தூதுக்குழுவுக்கும் ஐ.தே.க. தூதுக்குழுவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது கலந்துரையாடலில் இருதரப்புக்கும் இடையில் இணக்கம் காண வேண்டிய விடயங்கள் குறித்து ஆராயக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுக்காலை நடந்த இந்தக் கலந்துரையாடலில் அரசதரப்பில் அமைச்சர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, தர்மசிறி சேனநாயக்க, டி.எம்.ஜயரத்ன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந்திக குணவர்த்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் இரு பெரும் மோதல்கள் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்17

சென்ட்ரல் - சென். ஜோன்ஸ் அணிகளின் வடக்கின் மாபெரும் மோதலும் -

சென்.பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி பொன் அணிகளின் போரும் - இன்றும் நாளையும் யாழ் நகரில் இடம்பெறவுள்ளன.

இருபெரும் மோதல்களும் நகரில் நடப்பதால் மாணவர் மத்தியில் குதூகலம் காணப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதுவர் லின்டா நான்கு நாள் யாழ். விஜயம்

கொழும்பு,மார்ச்17

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லின்டா ஜோய் டபீல்ட் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.



செல்வி லின்டா ஜோய் டபீல்ட்

உடன் பிரிட்டிஷ் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் றொபேர்ட் கெண்டல், இரண்டாவது செயலாளர் (அபிவிருத்தி) மார்ட்டின் டோசன் ஆகியோரும் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

தமது யாழ்ப்பாண விஜயத்தின் போது அரச உயர் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள், கல்விமான்கள் ஆகியோரையும் செல்வி லின்டா ஜோய் டபீல்ட் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

யாழ். ஆயர் அதி வந்.கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம், அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் மற்றும் உள்ளூர் அரசியல் தலைவர்கள் ஆகியோரும் இவர்களில்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

### வத்திராயனில் படையினர் மீது ஷெல் தாக்கு!

வடமராட்சி கிழக்கு - வத்திராயன் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களின் போது படையினர் தரப்பில் ஒருவர் பலத்த காயம் அடைந்தார் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.


இப்பொழுது.....

உதயன்

இணையப் பதிப்பு

அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.

இணைய முகவரி :

www.uthayan.com


## ஆஸி. பிரதித் தூதுவரும் யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு,மார்ச்17

இலங்கைக்கான ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் செல்வி காதி குலுக்மன் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

யாழ்ப்பாணத்தின் நிலைமையை நேரில் அறிந்து கொள்வதற்காகவும் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்காகவும் விஜயம் செய்யும் செல்வி காதி குலுக்மன் இங்கு தங்கி இருக்கும் நாள்களில் அரசாங்க உயர் அதிகாரிகளையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்திப்பார்.

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் கிரிக்கெட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜா - எல மற்றும் புறக்கோட்டை பகுதிகள் நேற்று சுற்றிவளைப்பு!

கொழும்பு,மார்ச்17

ஜா-எல மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதலின் போது 54 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இராணுவம் மற்றும் விமானப் படையினர், பொலீஸார் நேற்றுக் காலை 6 மணியளவில் ஜா - எலப் பகுதியைச் சுற்றிவளைத்து 19 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

புறக்கோட்டைப் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரும், பொலீஸாரும் 35 தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

மேற்படி தேடுதல்களின் போது 150க்கும் மேற்பட்டோர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

கோப்பாய் பிரதேசசெயலர்
திரு. ம.கேதீஸ்வரன் அவர்களின்
பாசமிகு தாயார்

### இராசம்மா மணியம் அவர்கள்

13.03.2000 திங்கட்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*உதவி ஆணையாளர்,*
*சமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.*

*சமநல சேவைக்குழு உறுப்பினர்களும் உத்தியோகத்தர்களும்*
*சமநல கேந்திர நிலையம்,*
*புத்தூர்,*
*உரும்பிராய்.*

(74559)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரும்
இலங்கை வங்கி யாழ்ப்பாணம், இரண்டாவது கிளையில்
கடமைபுரியும்
திருமதி ஶ்ரீ. சறோஜினியின அன்புக் கணவர்

### நடராசா ஶ்ரீசோமசேகரம்

(கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை.)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி, பருத்தித்துறை

(C/11441)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி ஶ்ரீ. வனஜா அவர்களின்
அன்புத் தந்தையார்

### திரு. நடராசா ஶ்ரீசோமசேகரம்

(அதிகாரி, இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தரம் 9A மாணவிகள் (1999),
தரம் 10A மாணவிகள் (2000),
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(74563)

---

## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் நீதிமன்ற நீதிவான்
பா.சுப்பிரமணியம் J.P.அவர்களின்
அன்புத்தாயார்

### திருமதி விஜயலட்சுமி பாலசிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய தும்பளை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வே. தியானந்தராசாக்குருக்கள்*
*தும்பளை முருகன் கோயில்.*

(74566)

---

## கண்ணீர் அஞ்சலி

நடராசா ஶ்ரீசோமசேகரம்
(அதிகாரி, இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*முகாமையாளரும், ஊழியர்களும்*
*இலங்கை வங்கி, சுன்னாகம்.*

(74571)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் நீண்டகாலம் எழுதுவினைஞராக கடமையாற்றி இளைப்பாறிய எமது கல்லூரி பழைய மாணவி **திருமதி தவபுத்திரி** அவர்களின் அன்புக்கணவர்

### துரைரத்தினம் ஜேசுதாசன்

அவர்கள் அமரராகியதை முன்னிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்,
பழைய மாணவர் சங்கம்.
*யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி*

(74574)

---

## மெய்வல்லுநர் போட்டிகள்

காரைநகர்,மார்ச்17

தீவுப்பகுதி வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், உதவித் திட்டப்பணிப்பாளர் வே.சாம்பசிவம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு ஞானசம்பந்தக் குருக்கள், காரைநகர் வைத்தியசாலை வைத்தியஅதிகாரி கே.அம்பிகைபாகன், கல்லூரி அதிபர் மு.சு. வேலாயுதபிள்ளை ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ஐ-3-73)

* * *

புற்றளை மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ச.இந்திரராஜாவின் தலைமையில் புற்றளை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வித்தியாலய பழைய மாணவரும் லிபியாவில் பொறியியலாளராகக் கடமையாற்றுபவருமான அ.ஆழ்வாப்பிள்ளை கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசில்கள் வழங்க உள்ளார். (ஐ-180)

---

**முதலாந் தவணைப் பரீட்சை**
**தரம் 2 முதல் தரம் 8 வரை**
18-03-2000 சனிக்கிழமை நடைபெறும்.
BOND யாழ்நகர்.
(74567)

---


**ராஜா**
யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
சூப்பர்ஸ்ரார்
ரஜனிகாந்த்,
சௌந்தர்யா,
நடிகர்திலகம் மற்றும்
பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்
10.30, 2.00, 5.00
(C/11349)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அஜித், சிம்ரன்
நடித்த
**அவள் வருவாளா?**
(ரீலஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
21 முதல்
**அம்மன்**
(C/11429)

**லிபேட்டி**
அச்சுவேலி
அஜித், ஜோதிகா, ரகுவரன்,
மணிவண்ணன்
நடிப்பில்
**முகவரி**
(பிரதிகள் தரமானவை)
காட்சிகள் – 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*
(74565)


---

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்17

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 17

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு கலைமாணி பகுதி I - 1997, வணிகமாணி பகுதி - I 1997 ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களின் விவரங்களை வெளிவாரிப் பிரிவில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்17

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மாணவ முதல்வர்களுக்கான தலைமைத்துவ செயலமர்வு இன்றும் நாளையும் காலை 9மணி முதல் மாலை 4மணி வரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## கூட்டம்

நல்லூர்,மார்ச்17

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு சங்கத்தின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதியுமான பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் தங்கம்மா மண்டபத்தில் நடைபெறும். (உ-111)

---

# மரண அறிவித்தல்கள்

## துரைரத்தினம் ஜேசுதாசன்

(முன்னாள் ஊழியர், கெஸ்டெட்னர் (Gestetner) கம்பனி)

அராலியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் ஜேசுதாசன் நேற்று (16.03.2000) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி.துரைரத்தினம் அவர்களின் அன்பு மகனும் திருமதி தவபுத்திரி (ஓய்வுபெற்ற லிகிதர், கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகம்) அவர்களின் அன்புக் கணவரும் எமலின் (எமா) அவர்களின் அன்புத் தந்தையாரும் தேவதாசன் (நியூஸிலாந்து), விஜயதாசன் (ஜேர் மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தபேந்திரன் (கொழும்பு), குலேந் திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (17.03.2000) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00மணிக்கு (பு.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜே.தவபுத்திரி
(மனைவி)

(74549)

## திருமதி றெஜினா அந்தோனிப்பிள்ளை

திருமதி றெஜினா அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (15.03.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தி.அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி பிரான்சிஸ்கா திரவியம், திருமதி திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அ.டக்ளஸ் றேமன், அ.டியூக் ஜீவரெட்ணம் மற்றும் அ.றோய் (U.N.D.P), அ.பற்றிமா (கொழும்பு), உ.செல்வி, அ.அனித்தா (கொழும்பு), அ. ஆன் கலிஸ்ரா (புனித பத்திரிசியார் கல்லூரி, ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற திருமதி றோய் ஜெயமதி மற்றும் ஜோ. உதயசேனா ஆகியோரின் அன்பு மாமியாரும் றோ.றோஜஸ், றோ. வினோத் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள்), உ.அஸ்வத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.03.2000) வெள்ளிக்கிழமை மாலை 4.30 (பு.நே.) மணிக்கு 60/1, கோயில் வீதியில் இருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

60/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அ.றோய்
(மகன்)

(74572)

## சுப்பிரமணியம் சண்முகராஜா

(சந்திரா சோதிடநிலையம்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சோதிடர் சண்முகராஜா அவர்கள் நேற்று (16.03.2000) வியாழக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.03.2000) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:
சி.சறோஜினிதேவி
(பெறாமகள்)

(74577)

## திருமதி சுந்தரம் சின்னத்தம்பி

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுந்தரம் சின்னத்தம்பி நேற்று (16.03.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாமி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி, சிவமகாராசா (தலைவர், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), கைலைமகான் (ஆசிரிய ஆலோசகர்), அன்னபரிபூரணம் (பெற்றி ரீச்சர், ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பெரியதம்பி மற்றும் மலைமகள் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஞானேஸ்வரன் (இளைப்பாறிய இ.போ.ச. உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லம்போதரன், சர்வதயாபரன், அபர்ணா (மாணவி, மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணப்புலம்,
மல்லாகம்.

தகவல்:
சி.சிவமகாராசா
சி.கைலைமகான்
(மக்கள்)

(C/11443)

## பஸ் புறப்படும் நேரத்தில் மாற்றம்

தென்மராட்சி, மார்ச் 17

யாழ் பஸ்நிலையத்திலிருந்து தினமும் மாலை வேளைகளில் பளை, கிளாலி, முகமாலை ஆகிய இடங்களுக்குப் புறப்படும் கடைசி பஸ்களின் புறப்படும் நேரங்கள் நேற்றுமுன்தினம் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாலை 4.30 மணிக்குப் புறப்படும் பளைக்கான பஸ் மாலை 4.45 மணிக்கும், மாலை 4.45க்கு புறப்படும் கிளாலி பஸ் மாலை 4.30 மணிக்கும், கனகன்புளியடி ஊடாக முகமாலை செல்லும் பஸ் வழமைபோல் மாலை 5.00 மணிக்கும் யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## ஒன்று கூடல்

தென்மராட்சி, மார்ச் 17

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் புத்தாயிரம் ஆண்டின் ஒன்று கூடல் நாளை காலை 11.00 மணிக்கு மன்றத் தலைவர் க. சின்னத்தம்பி தலைமையில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-117)

# தவறவிட்ட அடையாள அட்டைகள் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில்

## உரியோர் பெற்றுக்கொள்ள ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 17

பொதுமக்களால் தவறவிடப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தவறவிட்டோர் கிராம அலுவலரின் அத்தாட்சிக் கடிதத்துடன் வந்து தமது அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டைகளின் பெயர், இலக்கங்கள் வருமாறு:

### விசேட அடையாள அட்டைகள்

★ கந்தன் செல்வச்சந்திரன் — மட்டுவில் தெற்கு (091009984)

★ கோபாலன் பாலேந்திரன் — கண்டி வீதி, சாவகச்சேரி. (091047648)

★ மாதன் தம்பியையா — கைதடி மேற்கு (091016559)

★ முருகர் ஞானகுரு - கீரிமலை வீதி, கொல்லங்கலட்டி. (0907000851)

★ பத்மநாதன் பத்மதாஸ் — வண்ணாமாரை, தெல்லிப்பழை. (0907025517)

★ சிவசுப்பிரமணியம் முத்துலட்சுமி — மீசாலை வடக்கு, கொடிகாமம். (091030100)

★ நல்லையா தயானந்தன் — சண்டிலிப்பாய் வடக்கு (0905024346)

★ சுந்தன் சின்னத்தம்பி— கைதடி மேற்கு. (091089980)

★ தர்மலிங்கம் விஜயராசா — அராலி தெற்கு. வட்டுக்கோட்டை. (090406595)

★ தேவபரன் மலர்விழி — கச்சாய்வீதி, சாவகச்சேரி. (091033611)

★ சிதம்பரப்பிள்ளை கந்தையா — வேம்பிராய், மீசாலை வடக்கு. (091036852)

★ கணபதிப்பிள்ளை சிறிகிருஷ்ணராசா — மீசாலை வடக்கு. (091048602)

### தேசிய அடையாள அட்டைகள்

★ கந்தையா கனகநாயகம் — மிருசுவில் வடக்கு (652823l3V)

★ செல்லத்துரை நடராசா — இராமலிங்கம் வீதி, கல்வயல் (510344359V)

★ நாகரத்தினம் விக்னேஸ்வரன் — மீசாலை மேற்கு (480912411V)

★ சண்முகலிங்கம் கேசவநாதன் — கைதடி கிழக்கு (702022894V)

★ ஜெகதீஸ்வரன் வரதன் — உரும்பிராய் கிழக்கு (761210610V)

★ வல்லிபுரம் சிவசம்பி — சாவகச்சேரி வடக்கு (391220718V)

★ முத்தையா முத்துலட்சுமி — சாயுடை மாவிட்டபுரம் (575371906V)

★ சடையன் சுப்பிரமணியம் — சரசாலை (520632735X)

★ நாகன் இளையதம்பி — புங்குடுதீவு மேற்கு (182840349V)

★ நித்தியானந்தன் இராசமணி — மீசாலை தெற்கு (565821121V)

★ தியாகராசா சச்சிதானந்தம் — சிறுப்பிட்டி மத்தி (471110582V)

★ துரைசிங்கம் விஸ்வலிங்கம் — அளுத்மாவத்த வீதி, கொட்டாஞ்சேனை (452282437X)

★ மாதன் தம்பியையா — கைதடி மேற்கு (550652552V)

★ அமிர்தலிங்கம் சிவகுமார் — கரவெட்டி வடக்கு (660852727V)

(ஐ-117)

# அபிவிருத்தியில் பிரதேச வேறுபாடு காட்டப்படக் கூடாது

## உலக வங்கிப் பிரதிநிதி தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 17

வடக்கு—கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதி, இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி என்ற பாகுபாடு இன்றி அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் மேற்கொள்ளப்படல் வேண்டுமென உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி மேரியன் நரடானோ தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக யுத்தம் நடைபெற்று வருகிறது. இதனால் வடக்கு—கிழக்குப் பகுதியை யுத்தப் பிரதேசமாகக் கருதிய உலக வங்கி அந்தப் பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

ஆனால் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதில் [illegible] தொல்லை நிறுவனங்கள் பலவும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழ்பவர்கள் ஒரே நாட்டு மக்கள் என்ற நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு உலக வங்கிப் பிரதிநிதி தெரிவித்தார். (ஐ-7-150)

## சிங்கள இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 17

கொழும்பு, புறக்கோட்டை பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரை விடுதலைப் புலி எனச் சந்தேகித்த பொலீசார் கைது செய்தனர். இளைஞனிடம் இருந்து 21 துப்பாக்கித் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் அவர் ஒரு சிங்களவர் என்று தெரியவந்ததுடன் அவருக்கும் பாதாள உலகக் கும்பலுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என நம்பப்படுவதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-9)

# தென்மராட்சி அபிவிருத்திப் பணிக்கு 7 லட்சம் ரூபா ஒதுக்க அங்கீகாரம்

தென்மராட்சி, மார்ச் 17

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் இவ்வருடத்திற்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள சுமார் ஏழு லட்சம் ரூபாவினை வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் அனுமதித்துள்ளார்.

அல்லாரை, மட்டுவில் வடக்கு, இடைக்குறிச்சி ஆகிய இடங்களில் பொதுக் கிணறுகள் அமைக்க தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் —

கச்சாய் மத்தியில் பொதுக் கிணறு அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் மறவன்புலோ சிவகவிசன சமூக நிலையத்தை புனரமைக்க ஒரு லட்சம் ரூபாவும் —

கைதடி மயானம் புனரமைப்பு வேலைக்கு ஒரு லட்சம் ரூபாவும் —

கைதடியில் வடிகால் அமைக்க 50 ஆயிரம் ரூபாவும் —

பிரதேச சபையின் பொது நூல் நிலையங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 60 ஆயிரமும் —

வரணி பொதுச் சந்தையில் பொதுமலசகூடம் அமைக்க 80 ஆயிரம் ரூபாவும் —

ஆயுர்வேத வைத்தியசாலையில் மலசகூடம் அமைக்க ரூபா 50 ஆயிரமும் —

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117-31)

## நுளம்பு ஒழிப்பு மருந்து வந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாவட்டச் சுகாதார சேவைகள் பிரிவின்கீழ் இயங்கும் மலேரியா தடுப்பு இயக்கத்திற்கு நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து நுளம்பு ஒழிப்பதற்கான மருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் இம்மருந்து எடுத்து வரப்பட்டது. அத்தோடு யாழ். மாவட்டச் சுகாதாரச் சேவைகள் பிரிவு வைத்தியசாலைகளின் பாவனைக்கான சில மருந்து வகைகளும் எடுத்து வரப்பட்டன. (ஐ-15)

## வாடகைக் குடியிருப்பாளர்கள் மின் இணைப்புப்பெறுவதில் சிரமம்

வலி. வடக்கு, மார்ச் 17

யாழ் மாவட்டத்தில் வாடகை வீடுகளில் குடியிருப்போர் மின் இணைப்புப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வீட்டுடைமை தொடர்பாகக் கிராம அலுவலர்களின் உறுதிப்படுத்தல் கடிதம் பெற்ற பின்னரே வாடகைக் குடியிருப்பாளருக்கு மின் வழங்கப்படுகிறது.

குடாநாட்டில் மின் வழங்கப்பட்ட ஆரம்பத்தில் எவ்வித நிபந்தனைகள், கட்டுப்பாடுகளும் இன்றி சகல குடியிருப்பாளருக்கும் இணைப்பு வழங்கப்பட்டு வந்தது. வாடகைக் குடியிருப்பாளர்கள் பலர் மின் இணைப்பைப் பெற்றுப் பயன்படுத்தி வந்தபின் அதற்கான கட்டணத்தை முழுமையாகச் செலுத்தாமல் வீடுகளை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர். இதனால் அந்தக் கட்டணங்களை அறவிடுவதில் மின்சாரசபைக்கு பல பிரச்சினைகள் எழுந்தன. இதனையடுத்தே வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு மின் இணைப்பு வழங்க நிபந்தனை விதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் இருந்து பெருமளவு எண்ணிக்கையான குடும்பங்கள் வெளியேறிவிட்டதால் வீடுகளில் வாடகைக்குக் குடியிருப்போரின் எண்ணிக்கையும் இங்கு அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ - 85)

## மட்டு. பயணப்பாஸ் நடைமுறை

# 20 ஆயிரம் பேர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு மகஜர்

மட்டக்களப்பு, மார்ச் 17

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து ஏனைய இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு, வழங்கப்படவிருக்கும் பாஸ் நடைமுறையை அமுல்படுத்த வேண்டாம் எனக்கோரி 20 ஆயிரம் பொதுமக்கள் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அ. கி. பத்மநாதனிடம் கையளிக்கப்பட்டது.

மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்திச் சபைத் தலைவர் கே. நவரத்தினராசா இந்த மகஜரைக் கையளித்தார். (ஐ-9-21)

## செய்தித் துளிகள்

### மருந்து விநியோகம்

சண்டிலிப்பாய், மார்ச் 17

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு இவ்வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் கடந்த 14 ஆம் திகதி நேரடியாக திணைக்கள வாகனம் மூலம் கொண்டு சென்று விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து இவ்வைத்தியசாலையில் நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (ஐ-135)

### "வாழ்வகம்" இல்லத்துக்கு உதவி

மானிப்பாயில் இயங்கி வரும் விழிப்புலன் வலுவிழந்தோர் 'வாழ்வகம்' இல்லத்திற்கு தற்போது பிரிட்டனில் வசிக்கும் வாழ்வகத்தின் பழைய மாணவரான எஸ். ரட்ணராசா 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை —

திருமதி தயானி என்பவர் இல்ல மாணவர்கள் உடைத்தேவைக்காக ஒரு தொகை நிதியினை இந்த இல்லத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்

இவர்களின் உதவிகளுக்கு 'வாழ்வகம்' இல்லபொறுப்பாளர் செல்வி அ. சின்னத்தம்பி பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார். (ஐ-135)

### சிறுதானியச் செய்கை

கட்டுடை, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் அண்மையில் நெல் அறுவடை செய்த வயல் காணிகளில் சிறுதானிய பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுமாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் அப்பகுதி விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அறுவடை செய்த காணிகளில் நல்ல ஈரலிப்பு இருப்பதால் அவற்றை உழுது பண்படுத்தி பயறு, உழுந்து, எள், சணல் ஆகியனவற்றை விதைத்து பயிரிடுமாறு மேற்படி சம்மேளனத்தின் தலைவர் சி பொ. வ.ம.க. முதலியார் தெரிவித்துள்ளார். (ஐ-135)

### கடைகளில் பரிசோதனை

சுகாதாரச் சீர்கேட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சுகாதாரப்பரிசோதகர்களினால் மந்திகை மருத்துவமனைக்கு முன்புறமுள்ள கடைகளில் கடந்த சனிக்கிழமை காலை திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். செல்வரத்தினம் தலைமையில் சுமார் பத்துக்கு மேற்பட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் இச்சோதனையில் ஈடுபட்டிருந்தனர். (ஐ-109)

### நிவாரணத்துக்கு பால்மாவும்

இம்மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரண விநியோகத்தின் போது பால்மாவும் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் செயலகம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. (ஐ-99)

### புன்னாலைக்கட்டுவன், ஈவினையில்

## புகையிலைச் செய்கையால் இம்முறை அமோக லாபம்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 17

குப்பிளான், புன்னாலைக் கட்டுவன், ஈவினை பிரதேசங்களில் இம்முறை புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அமோக இலாபம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குப்பிளான் விவசாயி ஒருவர் ஆயிரம் கன்றுகளை 40 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுள்ளார்.

அதேவேளை புன்னாலைக் கட்டுவனில் ஒரு விவசாயி 2200 கன்றுகளை 53 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தார்.

ஆரம்பத்தில் மழை, நோய் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட புகையிலைக் கன்றுகளைத் தவிர ஏனைய கன்றுகள் தற்போது நல்ல விலை கொடுத்து வியாபாரிகளினால் கொள்முதல் செய்யப்படுகின்றன.

பணப் பயிரான புகையிலை தற்போது பெரும் சிரமத்தின் மத்தியிலும் கப்பல் மூலம் தென்பகுதிக்கு அனுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-133)

# ஆரம்பக் கல்வி பயிலும் மாணவரின் தரம் மிகவும் வீழ்ச்சியுற்றுள்ளது!

## கோப்பாய் கலாசாலை அதிபர் கவலை தெரிவிப்பு

காரைநகர், மார்ச் 17

''யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடையே அண்மைக்காலத்தில் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. பல பாடசாலைகளில் தரம் 4, 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். கடந்த கால இடம்பெயர்வு இந்நிலைக்கு ஒரு பிரதான காரணமாகும். இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் யாழ். மாவட்ட மாணவர்களது கல்வித் தரம் குன்றக்கூடிய ஆபத்துள்ளதும்— இத்தகைய நிலையைப் போக்குவதற்கு கல்விச் சமூகம் ஒன்று பட்டு முனைப்புடன் செயற்படவேண்டும்''.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் ந. பரமசிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மு. பரஞ்சோதி மேலும் கூறியதாவது:

ஆசிரிய பயிற்சி மேற்பார்வைக்காக நாங்கள் வடபகுதியில் உள்ள பல பாடசாலைகளுக்கும் சென்ற போது அங்கு ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளில் கடந்த காலங்களை விட மிக மோசமாக மாணவர்களின் கல்வித் தரம் குன்றியிருப்பதை அவதானிக்க முடிந்தது. புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய. தரம் ஐந்தைச் சேர்ந்த—மாணவர்களில் பலர் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் உள்ளனர்.

இந்த மாணவர்கள் 1995, 1996 காலப் பகுதியில் இடம் பெயர்ந்த நிலையில் பாடசாலைகள் சீராக இயங்காத சூழ்நிலையில் தமது பாடசாலைக் கல்வியை ஆரம்பித்தவர்கள், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த பின்னரும் அவர்கள் சீரான முறையில் கல்வியைத் தொடர முடியாத அளவிற்கு பல்வேறு வசதியீனங்களும் நெருக்கடிகளும் இருந்ததால்தான் அவர்கள் கல்வியில் பின்தங்கி உள்ளார்கள். இவர்களுடைய கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்கு ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் கல்விச் சமூகத்தினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

அன்று பாடசாலை ஆசிரியர்களிடம் மட்டுமே மாணவர்கள் தங்கியிருந்தனர். இன்று இந்நிலை மாறி தனியார் கல்வி நிலையங்களிலும் பிரத்தியேகமாகக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களிடமும் மாணவர்கள் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்களுடைய ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவும் சீர்குலைந்துள்ளன — என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கணிதத்துறைப் பேராசிரியர் வே. தர்மரட்ணம் பேசுகையில் —

''விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களின் உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் உதவுகின்றன, சமூக வாழ்விற்கு ஏற்ற உயர்ந்த பண்புகளை மாணவர்களிடையே உருவாக்குவதற்கு விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன — என்றார்.

(உ-73)

## பரிசளிப்பு விழா

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 16 பாலர் பாடசாலைகளின் மாணவர்களின் பேச்சுத்திறன் காணும் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் யாழ். நீராவியடி கல்லூரி வீதியில் உள்ள நாவலர் பாலர் சோலையில் நாளை மறுதினம் காலை 8 00 மணிக்குக் கழகத்தின் தலைவர் இ. தவகோபால் தலைமையில் இடம்பெறும்.

(உ-32)

## தீவகத்தில் சனியன்று முன்னோடிப் பரீட்சை

### 5 ஆம் ஆண்டு மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். பல்கலைக்கழகத்தின் தீவக மாணவர் அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் தீவகத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்குமான மாதாந்த முன்னோடிப்பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தீவகத்தில் உள்ள 41 பரீட்சை நிலையங்களில் சுமார் 700 மாணவர்கள் தோற்றவுள்ள மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெறுகின்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதால் பாடசாலை அதிபர்கள் விடைத்தாள் மதிப்பிடும் பணிகளை விரைவாக முடித்து புள்ளிகளைத்தமக்கு அனுப்பி வைக்குமாறு தீவக மாணவர் அபிவிருத்திக் கழகத்தில் தலைவர் கேட்டுள்ளார்.

(உ-10)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 17

தென்மராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த தரம் 10 இல் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்குச் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

தரம் 9 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாழ்க்கைத் தேர்ச்சிக் கருத்தரங்கு நாளை இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-10-133)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்றே இயந்திரம்

தென்மராட்சி, மார்ச் 17

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு எக்ஸ்ரே இயந்திரம் ஒன்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த எக்ஸ்ரே இயந்திரம் தற்காலிகமாக வைத்தியசாலை சத்திர சிகிச்சை மண்டபத்தின் அறையொன்றில் வைக்கப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சை மண்டபத்தில் இயங்கி வந்த மார்பு நோய் சிகிச்சைப் பிரிவின் பெண்கள் வார்ட் வேறு இடத்துக்கு மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது (உ-117)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்: 1919 — 04 — 18

நிறைவு: 2000 — 02 — 16

மாதகல்

### வித்துவான் பொன். கந்தசாமி

பொன் கந்தசாமி புண்ணிய சீலர்
சைவாசார சீலம் வல்லவர்
சமூக சேவைத் தியாகச் செம்மல்
சொற்பொழிவாளர், நூலாசிரியர்
புராணபடன விரிவுரையாளர்
ஆயிரமாம் பிறை கண்ட அருந்தவர்
பொன் மலர் கந்தம் பெற்றது போன்ற
பொன்மனச் செல்வர் சிவகதி போற்றுதும்.

சைவப்புலவர் சு. செல்லத்துரையும், நண்பர்களும்.

இளவாலை. (74484)



## நீங்காத நினைவலைகள்

**18 ஆம் ஆண்டு**



அமரர்
**பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை**
(நடுவில்)
(சட்டத்தரணியும் சமாதான நீதிவானும் பிரசித்த நொத்தாரிசும்)
தோற்றம்: 15-09-1912
மறைவு: 14-03-1982
திதி: 24.03-2000

**9 ஆம் ஆண்டு**



திருமதி
**சறோஜினி ஞானபண்டிதன்**
(சறோ)
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)
தோற்றம்: 10-02-1956
மறைவு: 28-03-1991
திதி: 17-03-2000

**15 ஆம் மாதம்**



திருமதி
**மரகதவல்லி கணபதிப்பிள்ளை**
(நடுவில்பிள்ளை)
தோற்றம்: 12-09-1925
மறைவு: 05-12-1998

அன்பின் ஒளியாய் பாசத்தின் இருப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்குகளாய் எம்மை
வழிநடத்தி வாழவைத்த தெய்வங்களே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்கா.

அன்புடன் நினைவுகூரும் குடும்பத்தினர்

கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி.

(74381)

# உதயன்

## சர்ச்சைக்குரிய பாக். விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் நாளை மறுதினம் இந்தியா வந்து தமது பங்களா தேஷுக்கான ஒருநாள் பயணத்தை 20 ஆம் திகதி ஆரம்பிக்கிறார். பின்னர் 21 ஆம் திகதி மீண்டும் இந்தியா வருகிறார்.

தமது நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவில் முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியில் 25 ஆம் திகதி பாகிஸ்தானில் ஒரு சில மணிநேரம் தங்கிச் செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளின்ரனின் இந்த உபகண்ட விஜயம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. 20 வருடங்களின் பின்னர் இந்தியா வரும் முதலாவது அமெரிக்க ஜனாதிபதி இவர்தான். அத்துடன் 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் உதயமான பின்பு அங்கு விஜயம் செய்யும் முதலாவது அமெரிக்க ஜனாதிபதியும் கிளின்ரனே.

கிளின்ரனின் இந்திய—பங்களாதேஷ் விஜயங்கள் இந்த இரு நாடுகளினதும் வரவேற்பை மட்டுமன்றி பெரும்பாலும் முழுத் தெற்காசிய நாடுகளினதும் வரவேற்பைப் பெற்றுள்ளன. ஆனால் இவரின் பாகிஸ்தான் விஜயமே தற்பொழுது பெரும் சர்ச்சைக்கு இடமாக மாறி வருகிறது. கிளின்ரன் தனது பாகிஸ்தான் விஜயத்தை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளுக்கும் விஜயம் செய்யக் கிளின்ரன் திட்டமிட்டிருந்தார். ஆனால் கடந்த ஒக்ரோபரில் பாகிஸ்தானில் ஏற்பட்ட இராணுவப் புரட்சியின் பின்னர் கிளின்ரனின் பாகிஸ்தான் விஜயம் கைவிடப்பட்டது.

கிளின்ரன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தால் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் ஒப்புதல் கிடைத்தது மாதிரி ஆகிவிடும் என்று கருதப்பட்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது பாகிஸ்தானிலும் தங்கிச் செல்ல முடிவாகி இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

ஏற்கனவே பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர்கள் தமது பிடியை இறுக்கி வருகிறார்கள். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பாகிஸ்தான் மீண்டும் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கான அறிகுறி எதுவுமே இல்லை.

அதே சமயம் இந்திய நகரங்களைத் தாக்க பாகிஸ்தான் அணுசக்தி கொண்ட ஏவுகணைகளைத் தயாரித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கார்கில் பகுதியிலும் பாகிஸ்தான் பெருமளவு படைகளைக் குவித்து வருகிறது.

இந்தியா உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு. இப்படியான ஒரு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பையே ஆட்டம் காண வைப்பது தான் பாகிஸ்தானின் திட்டம்.

காஷ்மீர் தொடர்பான பேச்சுக்களை இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்த விஜயம் உதவலாம் என்று அமெரிக்க தரப்பில்நொண்டிச் சாட்டுக் கூறப்படுகிறது.

ஆனால் இன்றைய நிலையில் கிளின்ரன் பாகிஸ்தான் செல்வது உபகண்ட அமைதிக்கு உதவப்போவதில்லை. பாகிஸ்தானின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும் இந்திய எதிர்ப்புக் கொள்கைகளுக்கும் ஊக்கம் அளிப்பதாகவே இது அமையப் போகறது.

# நற்பயன் தரும் ஞானவித்துகளை யாழ்ப்பாணத்தில் விதைத்த சீவன் முத்தர் சிவயோக சுவாமிகள்

### ஞானக் கதிர்

பத்தினி, பக்தர்கள், தத்துவ ஞானிகளால் ஒரு நாட்டுக்குச் சுபீட்சமேற்படுகின்றது என்பது திருமூலநாயனார் திருவாக்கு. நமது கண்முன்னே சீவன் முத்தராக விளங்கியவர் யோகர் சுவாமிகளாவர். அவர் எம்மத்தியில் விதைத்துவிட்டுச் சென்ற ஞான வித்துக்கள் நன்றாக முளைத்துப் பூத்துக்காய்த்துக் கனிந்து நற்பயன் தருவதை நம்மால் உணரமுடிகின்றது.

ஞான ஒளிவீசும் திருமுகம், கருணை அலை எறிந்தொழுகும் கண்கள், பஞ்சென நரைத்துத் தொங்கும் தாடி, பாலென வெளுத்துக் கோதி முடியப்பெற்ற நரைமுடி, தூயவெள்ளை வேட்டி இத்தனையும் நிறைந்த ஞான கிரியாக விளங்கியவர் யோகர் சுவாமிகள்.

''கண்ணஞ் சனத்தர் கருணைக்கடலினர்; உண்ணின்றுருக்குவர் அன்னே என்னும்; உண்ணின் றுருக்கி உவப்பிலா ஆனந்தக்; கண்ணீர் தருவரால் அன்னே என்னும்''

என்பார் மணிவாசகப் பெருமான். சுவாமிகள் முன்னிலையில் பக்தர்களின் ஈடுபாட்டுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.



### யோகர்சுவாமிகளின் குருபூசை இன்றாகும்

சுவாமிகள் ஒரு நடமாடும் தெய்வம். தியானத்திலும் மௌனத்திலும் அறிவுரை பகர்தலிலும் நற்சிந்தனை படித்தலிலும் பொழுது கழிந்தது. அத்துடன் தம்மைத் தரிசிக்க வருவோரின் ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் சுவாமிகளின் கடமையாக இருந்தது.

மகாமந்திரங்கள் போன்று அவர்களுடைய திருவாயில் நின்றும் வரும் வாக்கியங்கள் பேருண்மைகளை உணர்த்துவன ''சும்மா இரு'' 'எப்பவோ முடிந்த காரியம்' ''யாமறியோம்'', 'ஒருபொல்லாப்புமில்லை'' ''முழுவதும் உண்மை'' என்று அடிக்கடி கூறுவார். தமது குருவினிடத்துத் தான் பெற்ற அனுபவத்தைத் தனது சிஷ்யர்களுக்குப் பகிர்ந்து வழங்கினார்.

இவர்களிடம் தரிசனம் பெறச் சென்றவர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன் போலப் புத்தொளி பெற்றே வீட்டுக்குத் திரும்பினர். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றவராக இருந்த போதிலும் அவற்றையெல்லாம் வெளிக்காட்டவில்லை. ஒவ்வொருவருடைய வாழ்விலும் சுவாமிகள் ஒளியூட்டி நின்றார். நோய்நொடிகளுக்கெல்லாம் ஏற்ற மருந்து சொல்லிக் கொடுப்பார். வைத்தியர்களால் மாற்ற முடியாத கொடிய வியாதிகளை எல்லாம் இவர் மாற்றியுள்ளார். உடல்நோய், உளநோய், உயிர்நோய் யாவையும் மாற்றிவிடும் பெரு வைத்தியர் இவர்.

தன்னை ஆட்கொண்ட குருமூர்த்தியின் கருணைத் திறத்தைக் காட்டிய இடத்தில் ''கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்தழுத்தி வினை கடிந்த வேதியன்'' எனப் பாடினார் மணிவாசகப்பெருமான். ஆனால் நாம் கண்ட குருநாதரோ இரும்பு தரும் நெஞ்சங்களையும் பதவி மோகம் பிடித்த பேர்வழிகளையும் செல்வச் செருக்குக் கொண்ட சீமான்களையும் திசைதிருப்பித் திருவருள் வழியில் வாழ வைத்தார். இந்தப் பேறுபெற்ற ஒரு திருக்கூட்டமே இன்று நம் மத்தியில் புனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

வாழ்க சிவனடி, வாழ்க சிவனடி.

வாழ்க சிவதொண்டன்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

## இணுவில் மருத்துவ முகாமில் 274 பேருக்கு இலவச சிகிச்சை

வலிகாமம் தெற்கு, மார்ச் 17

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் இணுவில் மத்தியகல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற இலவச பொது மருத்துவ, கண்பார்வைப் பரிசோதனை முகாமின் போது சுமார் 274 பேர்களுக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

154 பேர் கண்பரிசோதனைகளுக்கும்120 பேர்பொதுமருத்துவ பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

கண் பரிசோதனைகளின் போது 55 பேருக்கு கண்பார்வைக் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களுக்கான இலவச கண்ணாடிகளை லயன்ஸ் கழகம் விரைவில் வழங்க இருக்கின்றது. 22 பேர் விழிவெண் படலப் பாதிப்பு (கற்றாற்) உடையவர்களாகக் காணப்பட்டு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை செல்லச் சிபார்சு செய்யப்பட்டது.

77 பேருக்குப் பரிசோதனைகளின்போது நீரிழிவு நோய் கண்டுபிடிக்கப்பட்டது.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் உரோ மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்பரிசோதனை முகாமுக்கான ஏற்பாடுகளைச் செயற்றிட்டச் சேவை இணைப்பாளர் லயன் எஸ். எஸ். தங்கராஜா செய்திருந்தார்.

கண் பரிசோதனைகள் யாவும் எம். எஸ். பெர்னான்டோ ஸ்தாபனத்தினரால் மேற்கொள்ளப்பட்டன.

வைத்திய கலாநிதிகளான கே. இரத்தினசிங்கம், எம். பஞ்சலிங்கம், எஸ். பரமநாதன், சி. அருமைத்துரை ஆகியோர் மருந்தாளர் எஸ். யோகேஸ்வரனின் உதவியுடன் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்தனர்.

இரத்த அழுத்தம், சருமவியாதி, மலேரியா மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றதோடு தேவையானவர்களுக்கான மருந்துகளும் வழங்கப்பட்டன. (ஜ-152)

## நயினாதீவில் தையற் பயிற்சி நிலையம்

நெடுந்திவு, மார்ச் 17

நயினாதீவில் படித்து வேலைவாய்ப்புக்கள் கிடைக்காதிருக்கும் யுவதிகளுக்கெனத் தொழிற்பயிற்சிகளை வழங்கும் பொருட்டு வேலணைப் பிரதேச செயலகம் அங்கு தையல் பயிற்சி நிலையத்தைத்திறந்துள்ளது.

வேலணை பிரதேச செயலகம் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்துள்ள இந்த தையல் பயிற்சி நிலையத்தை வேலணை பிரதேசச் செயலர் செ. இரத்தினம் திறந்துவைத்தார். (ஜ-111)

**உதய வாக்கு**

தவறை ஒப்புக் கொண்டு அதைத் திருத்திக் கொள்பவன் வெற்றி பெறுவது நிச்சயம்.

— நெப்போலியன்

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### பிறவிப்பிணிக்கு ஒரு மருந்து

ராகம்: மோஹனம் தாளம்: ஆதி

பல்லவி

பிறவிப் பிணிக்கு ஒரு மருந்து – அது
இறைவண்ணை வைத்தீசன் ஈய்ந்திடும் அருள்விருந்து

அனுபல்லவி

அறவழி நின்றே நீ ஆத்ம பலம் பெறுவாய்
நெறிமுறை பக்திவழி நின்று சிவனைத் தொழுவாய்

சரணம்

பலவினை தீர்த்திடும் பரமன் சிவக்கொழுந்து
பாசம் அகற்றி ஞானம் பாலிக்க வந்தான் எழுந்து
தபஜெபம் புரிந்து சிவன் தாளைப்பிடிப்பாய் விழுந்து
தையல்நாயகி மணாளன் வண்ணை அமர்வான் இருந்து

''மஹா வித்துவான்''

## தவக்காலச் சிந்தனை

(பத்தாம் நாள்)

''நீங்கள்உங்கள்காணிக்கையைப்பலிப்பீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதர சகோதரிகள் எவர்க்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாபங்கள் உண்டென அங்கே நினைத்தால் அங்கேயே பலிப்பீடத்தின்முன் உரிய காணிக்கையை வைத்துவிட்டு போய் முதலில் அவர்களிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். (மத்:5-23-24)

வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் குடும்பங்கள் தங்கள் அன்புறவுத் தன்மைகளிலிருந்து விலகி, கடமைக்காக என்ற உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. தேவைகளை நிறைவு செய்வதற்கு மட்டும் குடும்பம் என்ற நிலை தோன்றி விட்டது. இலாப நோக்கம் கருதியே உறவுகள் இன்று நிர்ணயிக்கப்படுகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலை இயேசுவின் காலத்திலும் நிலவியிருப்பதை வேதாகமம் குறிப்பிடுகின்றது. சண்டைகளும் கருத்து முரண்பாடுகளும் குடும்பங்களின் கூட்டுறவுத் தன்மைகளை இணைத்து விடுகின்றன. இதனால் நானும் அயலவரும் என்ற நிலையிலிருந்து விடுபட்டு நானும் கடவுளும் என்ற நிலைக்கு மாறும் போது இயேசு இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

ஆலயங்களில் பிரமாண்டமான வழிபாடுகளும் ஆடம்பரங்களுமே மேலோங்கிக் காணப்படுகின்றன. அயலவன் பட்டினியாய் சாகும் போது நாம் ஆலயங்களின் திருவிழாக்களில் அதிக பணத்தைச் செலவு செய்கின்றோம். இன்று வழிபாடுகள் கண்ணுக்குக் குளிர்மையாகவும் காதுக்கு இனிமையாகவுமாக மட்டும் அமைந்து விடுகின்றன. இதனால் எம் அயலவருடன் சமாதானம் செய்யாது ஆலயத்தில் சமாதானத்தைத் தேடுகின்றோம். எமது ஆணவம், பிடிவாதம், கௌரவம், அகங்காரம், பணம் என்பவற்றை இறக்கி இறைவன் முன் வைத்து விட்டு அயலவருடன் ஒப்புரவு கொள்வோம்.

இறைவன் அவர் முன்னிலையில் எம்மைத் தாழ்த்தி இறைவன் கேட்கும் மனமாற்றத்தைக் காணிக்கையாகக் கொடுக்க இந்த தவக்காலத்தைப் பயனுள்ளதாக்கி இயேசுவின்கல்வாரிப் பாதையில்பங்கு கொள்வோம்.

யோ. மாலினி
திருநெல்வேலி

## நாளை

பங்குனி 5
சனிக்கிழமை
திதி: திரயோதசி
பிற்பகல் 12.56 வரை.
நட்சத்திரம்: மகம்
மாலை 6.21 வரை.
சுபநேரம்: 3.19–4.49
ராகுகாலம்: 9.19–10.49
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

புத்தாயிரமாம் ஆண்டின் முதல் சமர்

# வடக்கின் மாபெரும் மோதல் இன்றும் நாளையும் நடக்கிறது

யாழ்ப்பாணம் சென்ட்ரல், சென். ஜோன்ஸ் அணிகளுக்கிடையிலான - புத்தாயிரமாம் ஆண்டின் - முதலாவது மாபெரும் கிரிக்கெட் ஆட்டம் வழமைபோல் இன்றும் நாளையும் சென்ட்ரல் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இம்முறை நடப்பது வடக்கின் 94 ஆவது மாபெரும் மோதலாகும் (Battle of the North.)



சென். ஜோன்ஸ் அணியினர்

## சென்ட்ரல் அணி

இம்முறை சென்ரல் அணிக்கு பி.சுஜிதரன் தலைமை வகிக்கின்றார். ஆரம்பப் பந்து வீச்சாளரும் இடை வரிசைத் துடுப்பாட்ட வீரருமான இவர் சென்ரல் அணியில் மூன்றாம் வருடமாக இடம்பெறுகின்றார்.

அணியில் இடம்பெறும் ஏனைய வீரர்கள் வருமாறு:-

கு.பிரகாஸ்(உதவி அணித்தலைவர்), ச.பிருந்தாபன், த.தினேஸ், எஸ். றஜீவ், எஸ். கார்த்தீபன், வி.ஜீவகுமார், வி அகில்ராஜ், பி. சாள்ஸ் புரோனிஷன், கே.மோகன், எஸ்.நவநீதன், ஏ.லக்ஷ்மன், என்.சசிகரன், ஆர்.மதுசன், எஸ்.கிருஷ்ணா, ஜே.ரெனன், ஏ.டுரான்.



சென்ட்ரல் அணியினர்

பயிற்றுநர்:- ந.விஜயகுமார்.

துடுப்பாட்டத்துறைப் பொறுப்பாளர்:- வே.சண்முகலிங்கம்.

அணிப்பொறுப்பாசிரியர்:- ஜெ.ஜெயக்குமார்.

விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்:- வ.செ.மகேந்திரன்.

## சென். ஜோன்ஸ் அணி

சென்.ஜோன்ஸ் அணிக்கு விருது பெற்ற - நான்காம் ஆண்டு வீரரான - ஏ.டினேஷ் பெநேசர் இம்முறை தலைமை வகிக்கின்றார். சிறந்த துடுப்பாட்ட வீரரான இவர் சுழல் பந்து வீச்சாளரும் கூட.

அணியில் அங்கம்வகிக்கும் ஏனைய வீரர்கள் விபரம் வருமாறு:-

ரி.ரஜீவ்(அணியின் உதவித் தலைவர்), பி. தோமஸ் தேவசேயன், பி.எஸ். டிலான் தேவதாசன், ரி.ராகுலன், ஆர்.ரட்ணம், வி.விஷ்ணுவரதன், பி.பிரதீபன், பி.லவேந்திரா, ஸி.அகிலன், எஸ்.ராஜாராம், ஏ.ஜீவதர்ஷன், பி.பிரியந்தா, ஆர்.சஞ்சித், ஆர்.பிரகதீசன்.

பயிற்றுநர்:- கே.எஸ்.முருகுந்தன்.

விளையாட்டுப் பொறுப்பாசிரியர்:- உபஅதிபர் ஜே. அமலசீலன்.

இந்த மாபெரும் போட்டியின் முடிவில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த பந்துத் தடுப்பாளர், சிறந்த பல்துறை வல்லுநர், ஆட்டநாயகன், அதிக ஓட்டங்களைப் பெற்றவர் ஆகியோருக்கும், வெற்றி பெறும் அணிக்கும் வெற்றிக்கிண்ணங்கள், பரிசுகள் வழங்கப்படும்.

இதுவரை நடைபெற்ற 93 வருடாந்த ஆட்டங்களில் 32 இல் சென். ஜோன்ஸும் 21 இல் சென்ட்ரலும் வென்றுள்ளன. 32 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. எட்டு ஆட்டங்கள் பற்றிய முடிவுகள், பதிவுகள் தெரியவரவில்லை.

சென் ஜோன்ஸ் அதிபர் என். எஸ். தனபாலன், சென்டரல் அதிபர் க. இராசதுரை ஆகியோர் தலைமையிலான குழுக்கள் இந்தச் சுற்றுப்போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இன்றும் நாளையும் ஆட்டம் நடைபெறும் நேரங்கள் வருமாறு:-

* காலை 9-30 முதல் நண்பகல் 12-30 வரை.

* பிற்பகல் 1-10 முதல் பிற்பகல் 3-10 வரை.

* பிற்பகல் 3-30 முதல் மாலை 5-40 வரை.

வழமைபோல் இந்த ஆட்டத்திற்கான மத்தியஸ்தர்களை யாழ் மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் வழங்கவுள்ளது. (உ)


# பொன் அணிகள் போரும் இன்று யாழ். நகரில்!

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் அணிகள் போர்' (Battle of the Golds) மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.



சென். பற்றிக்ஸ் அணியினர்

இந்தத் தொடரின் 83 ஆவது வருடாந்த ஆட்டம் இம்முறை சென்பற்றிக்ஸ் கல்லூரியின் நூற்றியைம்பதாவது ஆண்டு நிறைவோடு. இந்தப் புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது பொன் அணிகள் போராக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்

## சென் பற்றிக்ஸ் அணி

சென்பற்றிக்ஸ் அணிக்கு ஜி.ஆர். தேவராஜன் தலைமை வகிக்கின்றார். அணியில் இடம்பெறும் ஏனைய வீரர்கள் விவரம் வருமாறு:-

எம்.திவாகரன் (உபதலைவர்), எஸ்.டென்சன், ஜி.அருள்ராஜ், ஜே.சகாயராஜ், ஜே.சி. பானுஜயன், எம்.பிரசாந்தா ஜோசப், ஏ.ஆர். சோர்ச்சில், வி.ஜெகன், பி.நிரஞ்சன், எஸ்.அன்ரனிராஜ், ஏ.கரிகஜன், சி.நிஷாந்தன், ரி.ஜே.அன்ரனைஸ், ஜே.ரி.ஏ.அருச்சுதன், ரி.ஆர்.டேமி, கே.விஜிகாந்த்.

பயிற்றுநர்:- விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் சி.சகாயராஜா.

கிரிக்கெட் பொறுப்பாசிரியர்:- பி.ஜெயக்குமார்.

## யாழ்ப்பாணக் கல்லூரி அணி

ஜி.லக்ஸ்மன் தலைமையில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி இம்முறை களமிறங்குகின்றது. அணியில் இடம்பெறும் ஏனைய வீரர்கள் விபரம் வருமாறு:-

ஜி.பிரகாஷ், எஸ்.சதீஸ், டி.சுரேந்திரராஜ், ஆர்.இராஜேஸ்வரன், ரி.பிரவணதாஸ், ஆர். டினேஸ், ரி.பிரசாந்தன், வி.நிமலாதரன், பி.நரேன், ரி.துஷியந்தன், ஏ.திலீபன், பி.பிரதீபன், ரி.அகிலேசன், பி.சிவரூபன், பி.ஜொகான், என்.எஸ்.செந்தூரன், எஸ்.நிம்றோ, ஆ.உகந்தயேகர், எஸ்.நிசாந்தன்.

பயிற்றுநர்:- ஆர்.குகன்

கிரிக்கெட் பொறுப்பாசிரியர்:- பி.எஸ்.மோகனக்குமார்.

விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்:- என்.தற்பரானந்தன்.

சென்பற்றிக்ஸ் அதிபர் வண. பிதா ஏ.ஜ.பேனாட், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. பிதா ஏ.ஏ.போல் ஆகியோர் இந்த ஆட்டத்துக்கான ஏற்பாடுகளைக் கண்காணித்து வருகின்றனர்.

இன்றும் நாளையும் காலை 10.30 மணி முதல் 5.30 மணி வரை ஆட்டங்கள் நடைபெறும்.

இந்த ஆட்டங்களுக்கான மத்தியஸ்தர்களையும் யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கமே வழங்கவுள்ளது. இதுவரை நடைபெற்ற 'பொன் அணிகள் போர்' ஆட்டங்களில் 24 ஆட்டங்களில் சென்பற்றிக்ஸும், 15 ஆட்டங்களில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வென்றுள்ளன. 24 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. 19 ஆட்டங்களின் முடிவுகள் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை.

இந்த ஆட்டத்தின் முடிவிலும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த பந்து தடுப்பாளர், பல்துறை வீரர், சிறந்த இணைப்பாட்ட வீரர்கள், ஆட்டநாயகன் ஆகியோருக்கும் வெற்றியீட்டும் அணிக்கும் வெற்றிக் கிண்ணங்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன. (உ)

"புலிகள் வந்து விட்டனர்"

# ராணுவத்தினரைக் கண்டு மக்கள் சிதறி ஓட்டம்!

கொழும்பு,மார்ச்17.

சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்த வந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் என நினைத்த பொதுமக்கள் பீதியால் நாலாபுறமும் சிதறி ஓடினர். இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று கொழும்பு சீதுவ பகுதியில் இடம்பெற்றது.

சீதுவ பகுதியில் மக்கள் நெருக்கமாக வசிக்கும் குடியிருப்புக்களுக்குள் இராணுவச் சீருடை அணிந்த சிலர் ஆயுதங்களுடன் உட்பிரவேசிப்பதைக் கண்ட பொதுமக்கள் "புலிகள் வந்து விட்டனர்" எனக் கூக்குரலிட்டுக் கொண்டு சிதறி ஓடினர் எனவும் -

அச் சமயம் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் வந்தவர்கள் இராணுவத்தினர் என உறுதிப்படுத்தியதை அடுத்து மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பினர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# டாக்டர்கள் தெற்கிலிருந்து வந்து இங்கு பணிபுரிய 2 மடங்கு சம்பளம்

## சுற்றறிக்கை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கிடைத்தது

யாழ்ப்பாணம்,மார்ச்17

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த டாக்டர்களுக்கு இரு மடங்கு சம்பளம் வழங்குமாறு தெரிவிக்கும் சுற்றறிக்கை ஒன்று யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையின்படி -

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து பணியாற்றும் டாக்டர்களுக்கு வருடத்துக்கு மூன்று சோடி ரயில்வே பயணச் சீட்டுக்களுக்குப் பதிலாக மூன்று சோடி விமானப் பயணச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

இதுவரை காலமும் இரண்டு விமானப் பயணத்துக்கான 'டிக்கெட்'டுக்களே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் -

• இங்கு பணிபுரியும் தென்னிலங்கை டாக்டர்களுக்கு வழங்கப்படும் விடுமுறைகளுக்கு மேலதிகமாகப் பிரயாண விடுமுறையாக இரண்டு நாள் விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது.

(உ-6-139)

## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

எதிர்வரும் 19-03-2000 அன்று நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்களுக்கு அறியத்தருகின்றேன். கூட்டத்திற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்,
(C/11427) பழைய மாணவர் சங்கம்.



மங்களகரமான
குதூகல ஆரம்பம்
புத்தாயிரமாம் ஆண்டில் அனைவரும் புதியவர்கள் ஆக வேண்டாமா?
நாளை (18-03-2000) சனிக்கிழமை முதல் உங்களனைவரையும் மகிழ்விக்க ஆரம்பமாகிறது.

## சண் விக்கி ரெக்ஸ்ரைல்

எனவே நாளை ஆரம்பமாகும் எமது ஸ்தாபனத்துக்கு என்றென்றும் நீங்கள் விஜயம் செய்ய நாடுங்கள்.
**சண் விக்கி ரெக்ஸ்ரைல்**
உடுப்பிட்டிச் சந்தி, யாழ்வீதி.
உங்கள் தேவையனைத்தும் எங்கள் சேவை!
(74526) உரிமையாளர்:- விக்கினேஸ்வரன்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 07 - 06 - 1920 இறப்பு 16 - 02 - 2000

திருமதி
### அப்பா சின்னத்துரை பாக்கியம்

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்த
அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காதம்மா!

இன்று (17-03-2000) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஆனந்தன்
(சரஸ்வதி மில்)
உப்புமடம் ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
T.P - 021 - 3299
- 021 - 3105
(C/11432)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 - 09 - 1918 இறப்பு 05 - 03 - 1993

உயர்திரு
### சோமநாதபிள்ளை கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர்)

எங்கள் நெஞ்சில் நீங்காது நிலைத்திருக்கும்
எந்தையே!
தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்

வேலணை கிழக்கு,
வேலணை-1.

### தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை,மார்ச்17

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் எதிர்வரும் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை இப்பணி இடம்பெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சகல சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், மில் உரிமையாளர்கள், விறகுகாலையைச் சேர்ந்தவர்கள், ப.நோ.கூ. சங்கம் - அதன் கிளைகள், வெதுப்பகங்கள் ஆகியனவற்றின் உரிமையாளர்கள் தத்தமது தராசுப் படிகளுக்கும் நிறுவை - அளவை உபகரணங்களுக்கும் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை - அளவைத் திணைக்களத்தின் பரிசோதகர் வை.கிருஷ்ணதாசன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

### சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச்17

யாழ். பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் காலை 9.00 மணி முதல் நடைபெறும்.

காயத்திரி மந்திர ஜெபம், லட்சார்ச்சனை, பஜனை, பண்ணிசை சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

### விண்ணப்பமுடிவு திகதி நீடிப்பு

கொழும்புத்துறை,மார்ச்17

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ சிவன் திருக்கோயிலில் செயற்பட்டுவரும் 'நியந்தி' அமைப்பினால் வருடாந்தம் நடத்தப்படும் சைவசமய வைதீகஆகம, கோலப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அமைப்பின் பொதுச்செயலாளர் பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர் அறிவித்துள்ளார். (ஐ-30)

### சுயமுயற்சி வீட்டுத்திட்டம்

தென்மராட்சி,மார்ச்17

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுகம் தென்மராட்சிப் பிரதேசத்தில் சுயமுயற்சி வீடமைப்புத் திட்டத்தினை இவ் வருடத்தில் மேற்கொள்ளவுள்ளது.

கொத்தணி முறையில் அமைக்கப்படவுள்ள இந்த வீட்டுத் திட்டத்திற்காக வரணி, மந்துவில், கைதடி நவபுரம் ஆகிய இடங்கள் பிரதேச திட்டமிடல் பிரிவினரால் பார்வையிடப்பட்டுள்ளன.

வீட்டுத்திட்டத்திற்கான இடம் தெரிவு செய்யப்பட்டதும் இவ்வருடம் வீடுகள் அமைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### சமுர்த்தி அலுவலர்களுக்கு நிரந்தர நியமனம்

தென்மராட்சி,மார்ச்17

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் சமுர்த்தி பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி முதல் செயற்படுமாறு நிரந்தர நியமனக் கடிதங்கள் வந்துள்ளன. நியமனக் கடிதங்கள் அடுத்தவாரம் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரிவில் பணியாற்றும் 17 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு ஏற்கனவே நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஐ-117)

### அதிபர்கள் வெற்றிடம்

வலிகாமம்தெற்கு,மார்ச்17.

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், அராலி வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம்திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)


## மங்களகரமான ஆரம்பம்
## ரூபி
### தொலைத் தொடர்பு சேவை

நாளை (18-03-2000) சனிக்கிழமை, முற்பகல் 10.00 மணி முதல் வரும் சுபவேளையில் எமது தொலைத் தொடர்பு சேவையையும், போட்டோப் பிரதி சேவையையும் ஆரம்பிக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொலைபேசி எண்:
உள்ளூர் :- 070-212945
வெளியூர் :- 0094-70-212945
* இரவுபகல் சேவை *

**ரூபி கொமினிகேசன்**
உடுப்பிட்டி வீதி,
வதிரிச்சந்தி, கரவெட்டி.
(74502) * நன்றி *


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



விழிப்பு 1927 - 02 - 07 உறக்கம் 2000 - 02 - 17

அமரர்
### இராசையா நாகம்மா

திதி நிர்ணயம்

சீர்பூத்த பிரமாதி சேர் மாசி பூர்வ பக்கம்
தேர் திதியாம் திரயோதசியதனில் - கார்பூத்த
குடிப்பிறந்த இராசையா குலமனையாள் நாகம்மா
முடிப் பிறையான் பாதஞ் சென்றாள் முத்தி.

நிகழும் பிரமாதி வருஷம் மாசி மாதம் (17-02-2000) பூர்வ பக்க திரியோதசியில் இறைபதம் எய்திய எமது அன்புத் தாயார் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (18-03-2000) சனிக்கிழமை அன்று புண்ணிய தீர்த்தமாகிய நயினாதீவு சித்தாமிர்த புட்கரணித் தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியம் எமது இல்லத்திலும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா நற்கதிபெறப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

எங்கள் தாயார் மறைந்த வேளையில் தவித்து நின்ற எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியும், பல வழிகளில், பலவகையில் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும், எம் அன்புத் தெய்வம் இன்னலுற்ற வேளையில் பல வழிகளிலும் உதவிபுரிந்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகள், மருத்துவ தாதிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வேறு வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மேலும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட வேலணைப் பிரதேச சபைத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஊழியர், சேமநலன்புரிச்சங்கத்தினருக்கும் மற்றும் அஞ்சல் மூலம் அனுதாபங்கள் தெரிவித்த சென். பரியோவான் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் வெளியிடங்களில் இருந்து தொலைபேசி மூலம், கடிதமூலமாகவும் அனுதாபச்செய்திகள் தெரிவித்தோருக்கும், நயினாதீவுக் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி, படையினர், நயினாதீவு பிரஜைகள் குழுத் தலைவர், உறுப்பினர்கள்,யாழ். மோட்டார் வாகன உரிமையாளர், ஊழியர்கள், படகு உரிமையாளர், ஊழியர்கள், உள்ளூர் போக்குவரத்துச் சாதன உரிமையாளர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் ஓடிவந்து துன்பம் துடைத்த அன்பு உள்ளங்களுக்கு எமது மனமார்ந்த, மனப்பூர்வமான நன்றிகளை உங்கள் அனைவரது பாதங்களிலும் சமர்ப்பிக்கின்றோம்.

நா.இராசையா (கணவன்),
திருமதி இ. பார்வதிப்பிள்ளை (சகோதரி),
Dr. இ. மருதயனார் (மகன்),
மற்றும் மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

புலவர் வளவு,
5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(74553)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Aspestos முகட்டு ஓடுகள் உடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு. 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (74546)

மிக உன்னத நிலையிலுள்ள Ford Prefect "105E" (Overhead Valve) 4 Sr! Honda Dax St 50 Motor Cycle உடன் விற்பனைக்குண்டு. 20, சங்கத்தானை ஒழுங்கை, டச்வீதி ஊடாகச் சாவகச்சேரி. [74469]

கே. கே. எஸ். வீதியில் 70 அடி நீளம், 15 அடி அகலம் கொண்ட 273 ஆம் இலக்க கடைக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல.1026, மே. பா. உதயன். (74545)

நல்ல நிலையிலுள்ள இரண்டு செப்புக் கிடாரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 105 (249), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (74518)

அவன் (Oven), Double Deck Radio, Spring இரும்புக் கட்டில், English Type-writer, சாப்பாட்டு மேசையும் கதிரையும், மோட்டார் Grinder T.V. Stand, காஸ் குக்கர், கால் மெஷின் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: முத்துக்குமாரசாமி இளைப்பாறிய ஆசிரியர், ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (74561)

## தேவை

மூன்று குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கும் சிறிய குடும்பத்திற்கு சமையல் உதவி செய்வதற்கும் ஆரோக்கியமுள்ள பெண் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். உணவு, தங்குமிடவசதி இலவசம். மா. சிவமூர்த்தி அச்சுவேலி வடக்கு, பிரதான வீதி, அச்சுவேலி. தொலைபேசி இல. 070 - 212431. (74487)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்டதுமான 2½ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்குஞானசீலன் (மாஸ்ரர்) 41, ஸ்ரேசன்ஒழுங்கை, சாவகச்சேரி எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சி/11416)

## தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் ரகு என்பவரது தேசிய அ. அட்டை (661622156V) 9-3-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிற்றி போய் ஹெயர் கட்டிங் சென்ரர், கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (74543)

இராசலிங்கம் நாகேஸ்வரி தேசிய அடையாள அட்டை [708193402 V] நிமலன் நாகேஸ்வரி விசேட அடையாள அட்டை (0903031781) இரண்டும் 13 - 03 - 2000 அன்று யாழ். மின் சார நிலைய வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விஜய் சில்க்ஸ், 123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். [74475]

இல. 18, விதானையார் வீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரெத்தினம் சிவபாதசுந்தரம் என்பவருடைய தேசிய அ. அ. (இல. 362560810 V) யும் விசேட அடையாள அட்டை (இல. 0901016237) யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பெரிய கடை, சிவராஜா ரெக்ஸ்ரைல் அல்லது மேற் கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (74515)

## தவறிவிட்டது

தோலை, அல்வாய் தெற்கைச் சேர்ந்த திருமதி அ. கதிர்காமத்தம்பி என்பவருடைய தேசிய அ. அ. விசேட அ. அ. மற்றும் பணப்பை என்பன 10-03-2000 அன்று நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடி வர்த்தகச் செயலாளரிடம் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (74525)

## நாற்றுக்கள் விற்பனைக்கு

நல்லஇன தக்காளி, கத்தரி நாற்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: அறவழி 29, கண்டிவீதி, கைதடி நுணாவில், சாவகச்சேரி. (74548)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு, சகல தினங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு;- 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம், (74521)

## புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் 23 ஆம் திகதி விநியோகிக்கப்படும். ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்யவும். பிறிமா பேட்டுக் குஞ்சுகளுக்குமுன் பதிவுஎடுக்கப்படும். தொடர்பு; S. கண்ணா இல. 31, மான்ஸ் பாடசாலைவீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (74555)

## மனைப்பொருளியல் வகுப்புகள்

தையல், பப்ரிக் பெயின்ரிங், கேக் ஐசிங், Sugar Craft, Fondand Icing, பூ வேலை, சமையற் கலை, கை வேலை, தலை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், Costume Jewellery, Patch work, Machine Embroidery ஆகிய வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.


விவரங்களுக்கு:

**VAKEE**

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(74541)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 05 — 1913

உதிர்வு: 08 — 04 — 1998

### திருமதி கதிர்காமத்தம்பி பூலட்சுமி

திதி: 17—03—2000

ஆண்டு இரண்டு சென்றாலும் தங்கள்
நினைவு இதயத்தை விட்டு அகலா!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

235/1, வி. எம். றோட்,
பருத்தித்துறை.

(சி/ 11436)

## குருபூசைத் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைத் தினம் நாளை சனிக்கிழமை புலோலியிலுள்ள கதிரைவேற்பிள்ளை ச. ச. நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் கந்தப்பு தங்கராசா தலைமையில் நடைபெறும் இத்தினத்தில் 'சிந்தையுள் என்றும் தங்கும் தமிழ்மொழித்துங்கவன்' என்னும் பொருளில் வல்லிபுரம் மார்க்கண்டு உரையாற்றுவார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-5)

## நடமாடும் சேவை

மூளாய், மார்ச் 17

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் நடமாடும் சேவைகளை நடத்துவதற்கு கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ஐ-99)

## சமூக விஞ்ஞான படிப்பு வட்டம்

### கலந்துரையாடல் 24

பூகோளமயமும் தொழிற்சங்க இயக்கமும்

தலைமை உரை:- இ, தவராசா (G. C. S. U)

தொடக்க உரை: செ. சிவபாலன் (C. B. E. U)

19 - 03 - 2000 ஞாயிறு காலை 9-30 மணி

யாழ். பல்கலைக்கழகம்

(74536)

## மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

தந்தையை இழந்த 4ஆம் தர வகுப்பில்
கல்வி கற்கும் மாணவர்களுக்கான
கல்விசார் உதவி செயல் திட்டம்

### சண்டிலிப்பாய் கோட்டம்

நாள்: 19-03-2000 (ஞாயிறு)
நேரம்: காலை 10.00 மணி (இ. நேரம்)
இடம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி

பிரதம விருந்தினர்: திரு. க. தனபாலசிங்கம்
(உதவிக்கல்விப் பணிப்பாளர் சண்டிலிப்பாய் கோட்டம்)

கௌரவ விருந்தினர்; லயன் A. தங்கேஸ்வரன்
(பிராந்தியத் தலைவர் லயன்ஸ் சர்வதேசம் 306B)

சிறப்பு விருந்தினர்: திருமதி வி. பசுபதிப்பிள்ளை
(அதிபர் மானிப்பாய் மகளிர் கல்லூரி
லயன் மானிப்பாய் பரிஷ்)

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அவர் தம் அன்னையர்கள், அதிபர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

A.V. கணேசலிங்கம் — கல்வி செயல்திட்ட குழுத்தலைவர்
இ. சிவயோகன் — தலைவர்

வாழ்த்துவோர்: 55卐72

**மெடிலான் சொப்**

ஆங்கில மருந்து நிறுவனம்,
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
T.P No 2943 (74551)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வன் நரசிங்கம் சத்தியரூபன்

மண்ணின் மடியில் 1985 - 11 - 20
மரணத்தின் பிடியில் 2000 - 03 - 16

இளைய சகோதரா;
ஏன் சென்றாய்?
உழவு இயந்திர வடிவில் - உனைப் பறிக்க
வந்தானோ காலன் - ஐயகோ!
வலிக்கிறது எம் மாணவ இதயங்கள்
வாஞ்சையுடன் உன் வதனம் காண
நீ போன இடம் தெரியவில்லை
தேடி வர வழியுமில்லை.
உன் ஆத்மா சாந்தி உற
எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

கண்ணீருள் நனைந்த
தரம் - 11 மாணவர்கள்,
யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை.

புலோலி. (சி/11439)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் பிரதேச செயலர்
திரு. ம. கேதீஸ்வரன் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி இராசம்மா மணியம்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா நற்சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

வலி.கிழக்கு-வடபகுதி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி. (சி-11418)

# செண். ஜோன் திருமண வாழ்த்து

கனடாவில்
நாளை திருமணம் புரியும்
எங்கள் படையணி உத்தியோகத்தர்களாகிய

**திரு. நடராஜா குமாரவேலுவுக்கும்
செல்வி தர்மலிங்கம் அகிலேஸ்வரிக்கும்**

புகழ், கல்வி, ஆற்றல்கள், வெற்றிகள், நன்மைகள், பொன், நெல், அழகு, பெருமை, முதுமையிலும் இளமை, நற்துணிவு, தொடர்சேவை, உடல் மன வலுவும் வனப்பும், நோயின்மை, நல்லூழ் ஆகிய 16 பேறுகளும் கிட்ட வேண்டி வாழ்த்துகின்றோம்.

செண். ஜோன் அம்புலன்ஸ் படையின் தேசிய பாசறையில் 25 மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளில் பல பெரும் சாதனைகள் படைத்த அம்மையார் அகிலேஸ்வரி.

க. அருந்தவராஜா
பெற்றோர் குழுமச் சபையும்,
செண்.ஜோன் அம்புலன்ஸ்
படையணியினரும்.

(74503)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 10 — 02 — 1907



உதிர்வு 17 — 02 — 2000

அமரர்

## திருமதி சுந்தரம் இளையதம்பி

17—02—2000 அன்று இறைபதமடைந்த அமரர் திருமதி சுந்தரம் இளையதம்பி அவர்களின் 31 ஆம் நாள் நினைவையொட்டி நாளை (18—03—2000) அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(74507)

# இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 24 நீர்ப்பாசனத் திட்டங்கள்

## உலக வங்கியின் உதவியுடன்

கொழும்பு, மார்ச் 17
வடக்கு—கிழக்குப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் உலக வங்கியின் உதவியுடன் முதல் தடவையாக 24 நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இவற்றில் பத்துத் திட்டங்கள் அம்பாறை மாவட்டத்திலும்—

14 திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும்—

மேற்கொள்ளப்பட உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு திட்டம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கிப் பணிப்பாளர் டொரண்டோவா இந்தத் திட்டங்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு உலக வங்கியால் வழங்கப்பட்டுள்ள கடனுதவி தகுந்த விதத்தில் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என டொரண்டோவா வலியுறுத்தியுள்ளார்.

(உ-8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 17
வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். நக்கா வீதியில் உள்ள சங்கக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் 25 ஆம் திகதி சங்கத்தால் நடத்தப்படவுள்ள பேரணி மற்றும் வழக்குத் தாக்கல் செய்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக சங்கச் செயலாளர் தெரிவித்தார். (உ-9)

## பழ மரக்கன்று விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 17
தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பழமரச் செய்கையை ஊக்குவிக்க பட்டினி ஒழிப்பு இயக்கத்தினர் பழமரக் கன்றுகளை வழங்கவுள்ளனர்.

சாவகச்சேரி கைதடி ஆகிய கமநல கேந்திர நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயிரத்து 600 விவசாயிகளுக்கு பழ மரக்கன்றுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

மா, பலா, தோடை, எலுமிச்சை, வாழை, மாதுளை ஆகிய பழ மரக்கன்றுகளே விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-117)

# 'ஸி. ரி. ஸ்கானிங்' இயந்திரம் யாழ். ஆஸ்பத்திரிக்கு!

## அடுத்த வாரம் வந்து சேரும்

யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சையை எளிதுபடுத்தும் வகையில் உதவக்கூடிய ஸி. ரி. ஸ்கானிங்' இயந்திரம் அடுத்த வாரம் அளவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்படும் என யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இயந்திரத்தைப் பொருத்துவதற்கென வைத்தியசாலையின் எக்ஸ்றே பிரிவில் ஓர் அறை ஒதுக்கப்பட்டு அது இயந்திரத்தைப் பொருத்துவதற்குரிய வகையில் மாற்றி அமைக்கப்பட்டு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் இயங்க வைக்கத் தொடங்கியதும் நரம்பு மற்றும் உள்ளுறுப்புக்கள் தொடர்பான சத்திர சிகிச்சைகளுக்கு கொழும்பு செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை குறையலாம் எனவும் —

அந்த நோயாளிகள் இங்கேயே அச்சிகிச்சைகளைப் பெற்றுப் கொள்ள வசதியாக இருக்கும் எனவும் — தெரிவிக்கப்படுகிறது. (உ)

# மரக்கறி விலை உயர்வு

நெடுந்தீவு, மார்ச் 17
ஊர்காவற்றுறையில் மரக்கறிகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளதாக அங்குள்ள பொதுமக்கள் கூறுகின்றனர்.

யாழ். நகரில் திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ கோவா ஆறு ரூபாவுக்கும், ஒரு கிலோ வெண்டிக்காய் 20 ரூபாவுக்கும் விற்பனையாகின்றன. ஊர்காவற்றுறையில் கோவா கிலோ 15 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை —

சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி சந்தைகளிலும் தற்போது மரக்கறி விலை சற்று உயர்ந்துள்ளது.

இதுவரை கிலோ 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த உருளைக்கிழங்கு இப்போது ஐம்பது ரூபாவாக விற்பனையாகியது.

அதேபோல கத்தரிக்காய், தக்காளிப்பழம், பாகற்காய், வெண்காயம் போன்றவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன.

போதியளவு மரக்கறிகள் சந்தைக்கு கொண்டுவரப்படுகின்றபோதிலும் அவற்றின் விலை உயர்வடைந்தே காணப்படுகின்றது.

(உ-111-152)

# நீங்காத நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — 52 ஆம் மாதம்





**வல்லிபுரம் குலசேகரம்பிள்ளை** — தோற்றம்: 1920-01-15 மறைவு: 1999-03-30

**ஈஸ்வரி குலசேகரம்பிள்ளை** — தோற்றம்: 1938-01-12 மறைவு: 1995-11-10

"ஆறுமோ எங்கள் நெஞ்சம்
ஆயுள் உள்ளவரை"
"அழியாது உங்கள் நினைவு
இவ்வுலகம் உள்ளவரை"

கல்வியங்காடு.

— குடும்பத்தினர்

(74516)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 — 05 — 1926



மறைவு 15 — 03 — 1992

## அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 17-03-2000

அறிவுரைகள் பல சொல்லி எம்மை
பாசத்துடன் வளர்த்து எடுத்த பப்பாவே!
எம்மை தவிக்க விட்டு எட்டாண்டுகள்
மறைந்தாலும் உங்களுடன் வாழ்ந்த
இனிய நினைவுகள் எம்மை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்,

**அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்,**

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(74445)

# பங்கீட்டு அட்டைக்கு சீனி விநியோகம்

'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் யாழ். செயலகத்தினால் வெள்ளைச்சீனி விநியோகம் செய்யப்படவுள்ளது.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு தலா மூன்று கிலோ சீனியும்— 4, 5 பேர் கொண்ட குடும்பங்களுக்கு 5 கிலோ சீனியும் — விநியோகம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு கிலோ சீனி 24 ரூபா வீதம் வழங்கப்படும் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

ப. நோ. கூ. சங்கங்கள் தத்தமது பிரிவு பிரதேச செயலர்களுடைய சிபார்சுக் கடிதங்களுடன் யாழ். செயலக களஞ்சியத்திலிருந்து சீனியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அந்த அதிகாரி கேட்டுள்ளார்.

(ஐ-5)

## குடிதண்ணீர் பற்றாக்குறை

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் தாங்கி மூலம் வழங்கப்படும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இந்த வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் குடிதண்ணீர்த் தாங்கியில் தினமும் ஒரு தடவை மட்டுமே குடிதண்ணீர் வழங்கப்படுவதால் மாலை வேளைகளில் தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்படுவதாகப் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-17)


## யாழ். வைத்தியசாலை கண் மாற்று சத்திரசிகிச்சை

PKB

கண்மாற்று சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். கண்மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ள விருப்பவர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுகளின் பிரகாரம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி நிர்ணயம் செய்யப்படும்.

★ கண்ணைத் தானமாக அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

★ 'கட்ரக்ட்' (CATARACT) சத்திரசிகிச்சை பிரதி வியாழன் தோறும் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகின்றது.

★ சகல நோய்களுக்கான சத்திரசிகிச்சைகளும் நடைபெறுகின்றன.

★ ஏற்புத்தடை மருந்து (A.T.S) ஏற்றப்படுகின்றது.

284, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்.

(சி/11405)


## 31 ஆம் நாள் அஞ்சலி



உரும்பிராய் மேற்கு

### திருமதி சின்னத்தங்கம் விக்கினேஸ்வரன் (தங்கமணி)

தோற்றம் 10-05-1939 | மறைவு 16-02-2000

**வீட்டுக்கிருத்தியம்: 17-03-2000**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகப் பிரகாசித்தவரே! நீங்கள் இயற்கை எய்தி மாதம் ஒன்றாகிறது. மாதம் ஒன்றல்ல ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள் உள்ளக் கமலங்களில் என்றும் உறைந்து இருப்பீர்கள்.

உங்களது ஆத்மா சாந்தியுறும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை மனதில் இருத்திப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பார்ந்த குடும்பத்தினர்

"திருவேரகம்"
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(74552)

## கள் விற்பனை அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 17

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதால் இப் பகுதிகளில் தற்போது கள் உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்க அங்கத்தவர்கள் தமது தொழில்களை மீண்டும் ஆரம்பித்து உற்பத்தி செய்யப்படும் கள்ளினைத் தவறணைகளுக்கு வழங்கி வருவதாகவும்—

விற்பனையும் முன்னரைவிட அதிகரித்துள்ளதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## மருதடி விநாயகர் மஹோற்சவம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 17

பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோவில் மஹோற்சவ விழா எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு துவஜாரோகணமாகி அன்றுமுதல் 18 தினங்கள் வரை பகல், இரவு உற்சவங்கள் நடைபெற உள்ளன.

உற்சவத்துக்கான பூர்வாங்க கிரியைகள் இம்மாதம் 27 ஆம் திகதி மாலை ஆரம்பமாகின்றன.

ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி மாலை 6.30 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் —

ஏப்ரல் 12ஆம் திகதிமாலை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் —

ஏப்ரல் 13 ஆம் திகதி பகல் 12 மணிக்கு இரதோற்சவமும் —

ஏப்ரல் 14ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும்—

விசேட உற்சவங்களாக நடைபெறும்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரம்மஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்களின் திருவிளையாடல் புராண தொடர் சொற்பொழிவு உற்சவகாலங்களில் மாலை வேளையில் இடம்பெறும்.

(ஐ.152)

## காசநோய் தினம்

உலக காசநோய் தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்க்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு யாழ். மார்பு நோய்ச் சிகிச்சைநிலையம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கருத்தரங்குகளையும், காசநோய் பற்றிய பிரச்சாரங்களையும் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

(ஐ-135)

## கூட்டுறவு ஊழியரின் சம்பளக் கொடுப்பனவு

தென்மராட்சி, மார்ச் 17

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் கடந்த 1999 ஜூன் மாதத்திற்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் மூன்று கட்டங்களாக வழங்கப்பட்டுவருகின்றன. இரண்டு கட்டக் கொடுப்பனவுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டதாகவும் மூன்றாம் கட்டக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக அங்கத்தவர்களின் கொடுப்பனவுகள் உரிய காலத்தில் வழங்க முடியாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## பாடசாலை மாணவியின் சங்கிலியை அறுக்க முயற்சி!

பாடசாலை முடிந்து வெளியேறிக்கொண்டிருந்தமாணவி ஒருத்தி அணிந்திருந்த சங்கிலியை வீதியில் வைத்து அறுக்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

ஈச்சமோட்டை விதானையார் வீதிப் பகுதியில் கடந்த புதனன்று இச் சம்பவம் இடம்பெற்றது.

சைக்கிளில் வந்த நபர் ஒருவர் மாணவியைப் பின் தொடர்ந்து வந்து சங்கிலியை அபகரிக்க முயன்றார். அவ்வேளை மாணவி கூச்சல் இடவே காரியம் பலிக்காமல் அந்த நபர் தப்பிவிட்டார்.

(ஐ-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 04 — 01 — 1928



மறைவு 16 — 02 — 2000

### திருமதி மகேஸ்வரி மார்க்கண்டு

கண்கள் குளமாக நெஞ்சம் பதைபதைக்க உங்கள் நினைவோடு வாழும் எங்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறுங்கள் அம்மா.

எம் குடும்பத் தலைவியின் பிரிவை அறிந்து எம் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றி கூறுவதுடன் எமது இல்லத்தில் 17—03—2000 வெள்ளிக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகளும் 18—03—2000 சனிக்கிழமை சபிண்டீகரணமும் தொடர்ந்து நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

வே. மார்க்கண்டு குடும்பத்தினர்.

குமாரவளவு,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(74547)

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்லத்துரை ஜெகன்

அன்னை மடியில் 1976-12-20 | அந்நியர் அழிப்பில் 1999-03-28

**திதி: 17-03-2000**

புன்னகை சிந்தி நீ புன்முறுவல் பூத்ததை
எண்ணிடும் போதினில் எமதுள்ளம்
ஏங்கிடுதே அந்நாளுக்காய்.
மன்னுயிர் மதிக்கும் மாண்பதை — மறந்து
வன்பகை கொண்டுனை
வதைத்திட்ட வகை தானென்ன?
முன்பு நீயிருந்தன்பு செய்ததுபோல்
இன்னொருக்கால் வந்துதித் தெமது
கண்ணீர் துடைக்க காரணமாகாயோ?

அம்மா, அப்பா,
சகோதரிகள், சகோதரர்கள்.

உரும்பிராய் வடக்கு,
மடத்தடி.

(74521)

# இந்தியப் பிரதித்தூதுவர் இன்று செல்வச்சந்நிதிக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்17

மூன்றுநாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள இந்தியப் பிரதித்தூதுவர் திரிபாதி இன்று காலை தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு நடத்துவார்.

வழிபாட்டைத் தொடர்ந்து பருத்தித்துறையில் உள்ள சுவாமி சித்ருபானந்தாவின் ஆச்சிரமத்துக்கும் அவர் விஜயம் செய்வார். பருத்தித்துறை நகரசபைத் தலைவரையும் அவர் சந்திக்க ஏற்பாடாகி உள்ளது.

நேற்றுக்காலை யாழ். பொது நூலகத்துக்கு விஜயம் செய்த அவர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு நடத்தியதுடன் நெடுந்தீவுக்கு சென்றார்.

இன்று வடமராட்சி விஜயத்தினை முடித்துக்கொண்டு காங்கேசன்துறை செல்லும் அவர் அங்கு வடபிராந்திய கடற்படைத் தளபதியுடன் பேச்சு நடத்திய பின் கொழும்புக்கு திரும்புவார். (இ-5-15-139-111)

## நியமனம்

கொழும்பு,மார்ச்17

ஐ.தே.க.வின் மனித உரிமைகள் உப.குழுவின் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். (ஐ-3)

## விபத்தில் சகோதரர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்17

மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை வீதியால் வந்த மாடு ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளான இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் புத்தூர் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த சகோதரர்களான பசுபதி நகுலேஸ்வரன் (வயது23), பசுபதி கனகரத்தினம் (வயது21) ஆகியோரே காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-10-15)

## இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில்

கொழும்புத்துறை,மார்ச்17

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு 'நடைமுறை வாழ்க்கையில் சமயம்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் நா. சுப்பிரமணியன் உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி.நாகலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுக உரையை வல்வை வைத்தீஸ்வர தேவஸ்தானத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ப.மனோகராக் குருக்கள் நிகழ்த்துவார். நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ-30)

## குருபூசை நிகழ்வுகள்

வலிகாமம்தெற்கு,மார்ச்17

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் சிவயோக சுவாமிகள் குருபூசை உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும்.

சுவாமிகளின் திருவுருவப் படம் உடுவில் கிழக்கு நாகம்மாள் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக கடவுள் சந்நிதி நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு, உடுவில் இந்து இளைஞர்மன்ற இசை வகுப்பு மாணவர்களின் பஜனை இடம்பெறும்.

தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தலைவர் சுவாமிகள் ஏ.செல்லத்துரை அருளுரை வழங்குவார். (ஐ-152)

* * *

கொழும்புத்துறை,மார்ச்17

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஸ்ரீ யோகர் சுவாமியின் குருபூசை இல்ல அதிபர் திருமதி இராசேஸ்வரி துரைரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

* * *

கொழும்புத்துறை,மார்ச்17

வதிரி ஸ்ரீபரமானந்தா சுவாமிகளின் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை ஆகும். காலை 8.00 மணிக்கு வதிரியிலுள்ள ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்தில் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் விசேட அபிஷேகத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகி சுவாமியின் சமாதியில் பூசை, ஆராதனை, திருமுறை ஓதல், பஜனை - கூட்டுப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகள் நடைபெறும். (ஐ-30)

## வாழ்த்துகின்றோம்

யாழ்.மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளராக பதவிஉயர்வு பெற்றிருக்கும்

திருவாளர் S.A. யோசப்
(ASST. DIRECTOR OF FISHERIES,
JAFFNA DISTRICT.)

அவர்களின் சேவை மென்மேலும் வளர மனமார வாழ்த்துகின்றோம்.

சுழிபுரம்மேற்கு
கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்,
சுழிபுரம்.

நிர்வாகிகள்,
அங்கத்தவர்கள்.

Reg.No:- J/VW/Co-op/01 (74568)

## வலிகாமம் வடிசாலை சாராயம் விலை குறைப்பு

வலிகாமம் வடிசாலையில் (நவாலி) உற்பத்தி செய்யப்படும் சாராயங்களின் சில்லறை விலை குறைக்கப்பட்டுள்ளது.

விசுர் சாராயம் 33.5% (750 மி.லீற்றர்) – 190/-

பனை விசேட சாராயம் 34.5% (750 மி.லீற்றர்) – 200/-

இவற்றை உத்தரவு பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்

*வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,*
*மானிப்பாய் (வி/து). யா/மா J/P. 2154 - 06.11.1993*

(C/11440)



## D.சேனாதிராசா அன் சன்ஸ்



(LONDON CERTIFIED OPTOMETRIST M.H.D.I.
கும்பகோணம் L.C.O. இலங்கை)

எமது 25% விசேட சலுகையுடன் எம்மிடம் மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்த எமது வாடிக்கையாளர்களுக்கு எமது நன்றிகள்.

குறிப்பு:- மேலும் நாம் அறிமுகப்படுத்தும் விசேட சேவை. காலை 9.00 தொடக்கம் 12.00 மணிவரை இலவச கண் பரிசோதனை தினமும் நடைபெறும்.
எமது சேவையை நாம் மேலும் விரிவுபடுத்த இருப்பதால் நாம் உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

*வரலாற்றுப் புகழ்மிக்க யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ். பரியோவான் கல்லூரி கிரிக்கெட் போட்டி சிறப்பாக நடைபெற்று முடிய எமது வாழ்த்துக்கள்.*

**இறக்குமதி செய்யப்பட்ட SUN GLASSES எம்மிடம் விற்பனைக்குண்டு.**

*இல.162, 1ஆம் குறுக்குத் தெரு,*
*வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக,*
*யாழ்ப்பாணம்.*

உரிமையாளர்:-
சே.ஆனந்தராஜா,
யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவன்.

(74565)

## ஓராண்டு நினைவஞ்சலியும் பிறந்தநாள் நினைவுகூரலும்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1913 - 03 - 05 |  | 1999 - 02 - 15 |

### அமரர் சி.பி.வைரமுத்து

(இளைப்பாறிய ஆசிரியர்)

என்றும் எங்கள் நெஞ்சங்களில் குடியிருப்பீர்கள்;
அன்பால் எம்மைக் கொள்ளை கொண்டு அறிவால்
எம்மை வியக்க வைத்து ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் முகம் எம் நெஞ்சை விட்டகலாது.

*அன்பின் மனைவி, மகன், மகள்மார்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*உறவினர்.*

தகவல்:
திருமதி தமயந்தி சிவபாதசுந்தரம்
*16 - 2/6, அமரசேகர மாவத்த,*
*கொழும்பு - 05*

*"சுகிர்த மாளிகை"*
*உடுவில்,*
*சுன்னாகம்.*
(74570)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

(K.K.P. பண்டாரவளை)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் 45, பிரதான வீதி, பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசரத்தினம் நேற்றுமுன்தினம் (15.03.2000) புதன்கிழமை பண்டாரவளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் இராகினி, இராசேந்திரம் (K.K.P. பண்டாரவளை), ஞானேந்திரம் (நில அளவைத் திணைக்களம், பதுளை), இரஜனி, ஞானவதனி, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (கம்பளை), சிவகௌரி, குமுதினி (H.N.B., பதுளை), தேவலிங்கம் (மலர் புடவையகம், யாழ்.) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற இரத்தினராசாவின் அருமைச் சகோதரரும் பூபாலசிங்கத்தின் அருமை மைத்துனரும் கோவளம் சிதம்பரப்பிள்ளை - பரிமளத்தின் அன்பு மருமகனும் அஜந்தன், சிந்துஜா, டினேஸ், திவாகரன், தர்ஷா, தனுஜா, ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2000) வெள்ளிக்கிழமை பண்டாரவளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேவலிங்கம்
(மருமகன்)

இல.5, சிறாம்பியடி,
யாழ்ப்பாணம்.
(74556)

## திருமதி கனகம்மா மாரிமுத்து

(இளைப்பாறிய ஆசிரியை, யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகம்மா மாரிமுத்து நேற்றுமுன்தினம் (15.03.2000) புதன்கிழமை தெகிவளையில் காலமானார்.

அன்னார் தா.மாரிமுத்து (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் குகனேஸ்வரி, சித்ராபுவனராணி, வரலட்சுமி (மிருக வைத்தியர்), கிருபாணந்தி (நோர்வே), குகனேஸ்வரன் (இத்தாலி), விக்னேஸ்வரி (நோர்வே), கிரிசாந்தி (ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமரன் (மக்கள் வங்கி), ரவீந்திரராஜா (கொழும்பு), ராஜ்குமார் (காமா பார்மசி உரிமையாளர்), தவமலர் (இத்தாலி), குணரட்ணம் (நோர்வே), சத்தியநாதன் (ஆயுள்வேத வைத்தியர், வவுனியா), செல்வராஜா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவஜீவன், ஜெகஜீவன், லவஜீவன், லவதாரணி, ஜீவதாரணி, சாயிஜீவன், கிருத்திகா, ஆர்த்திகா, நிருத்திகன், தாரிகா, மதுசூதனன், ஜெனார்த்தனன், ஹம்சாயினி, சனந்தன், சவிந்தன், மதுபாஷினி, சுயானி, தர்ஷானி, மதியழகன், துஷ்யந்தி, துஷ்யந்தன், துஷாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருண்ராஜின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.03.2000) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு 1/9, 2ஆவது ஒழுங்கை, அநுரா மாவத்தை, அண்டர்சன் வீதி, தெகிவளையிலுள்ள இல்லத்திலிருந்து கொகுவலை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.இராசதுரை
(இராசா ஹாட்வேயர்)
T.P: 829123

177, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(74575)

## சரவணபவன் சங்கரப்பிள்ளை

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணபவன் சங்கரப்பிள்ளை வன்னியில் காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் சிவராஜசிங்கம், புவனேஸ்வரி, ஜெயராஜசிங்கம், இந்திராணி, பரராஜசிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான சத்தியராணி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைரவநாதன், புனிதம், இதயகுமாரி, அன்னமோகனகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கல்யாணி (வர்த்தகபீடம், யாழ். பல்கலைக்கழகம் 2ஆம் வருடம்), பார்த்திபன், சிவரதன், தயாளன், கலைவாணி, ராஜி, சுரண், சசி, தர்மிகா, கேசினி, கீர்த்தனன், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (15.03.2000) புதன்கிழமை வன்னியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.புவனேஸ்வரி
(மகள்)

வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(74576)

புலிகளைச் சந்திப்பதற்கு

# வன்னி செல்ல மேலும் இருவர் அனுமதி கோரி விண்ணப்பம்

கொழும்பு,மார்ச்17

விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலில் உள்ள படையினரின் விடுதலை தொடர்பாகத் தாம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் -

எனவே வன்னி செல்வதற்குத் தமக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவேண்டும் எனவும் - கோரி பிரதி அமைச்சர் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஏற்கனவே நீதி, அரசமைப்பு விவகார, தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் டிலான் பெரேரா பாதுகாப்பு அனுமதி கோரி விண்ணப்பித்தது தெரிந்ததே.

சுகாதார, சுதேச மருத்துவ பிரதி அமைச்சர் டி.எல். கரலியத்த, பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தசேன ஹேரத் ஆகியோரே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள மற்றைய இருவரும் ஆவர்.

இதேவேளை இராஜகிரிய - காஸில் வீதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாகவே தமக்கான அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-7)

## தனங்களப்பில் மோதல்.

தனங்களப்பு, முகாவில் மற்றும் தட்டுவான்கொட்டி ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் - படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

புலிகளின் தாக்குதல்களை அடுத்துப் படையினர் பதில் தாக்குதல்களை நடத்தினர் எனவும் -

இதில் விடுதலைப்புலிகள் தரப்பில் 4 பேர் உயிரிழந்தனர் எனவும் - பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

படையினர் தரப்பில் எதுவித இழப்பும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-4)

## மேலதிக விமான சேவை

பலாலிக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையில் எதிர்வரும் 20ஆம், 22ஆம், 24ஆம் திகதிகளில் மேலதிக விமானசேவை ஒன்று ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

அந்தத் தினங்களில் காலை 8மணிக்கு முன்னரே பயணிகளை சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## கான்ஸ்டபிள் பலி

திருகோணமலை,மார்ச்17

மூதூர் பச்சனூர் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் மோட்டர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். (இ-3-6)

## அராலிக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம்,மார்ச்17

அராலி வடக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பான பணிகள் ஓரிருதினங்களில் ஆரம்பமாகவிருக்கின்றன.

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பேசியதை அடுத்து இந்தப் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## முழுநிலா கருத்தரங்கு

கருப்பொருள்:- *'குடும்பத்தில் இளைஞர்'*

கருத்துரை வழங்குபவர்:- *திரு. சி. சிவதட்சணாமூர்த்தி*
உதவி இயக்குநர்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

காலம்:- *19-03-2000 ஞாயிற்றுக்கிழமை*

நேரம்:- *பி.ப. 3.30 (இ.நே)*

இடம்:- *'அகவொளி'*
*குடும்ப வளத்துணை நிலையம்,*
*131, பாங்சால் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

இயக்குநர்.

(74544)

## முக்கிய அறிவித்தல்

## ஈழத்து இராமேஸ்வரம் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானம்

**20-03-2000 அன்று காலை 9.36 சுப வேளையில் இடம்பெறவிருந்த மேற்படி தேவஸ்தான புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம், 16க்கு மேற்பட்ட புதிய வேலைத்திட்டங்கள் (திருப்பணிகள்) நிறைவுறாதிருப்பதால் அவற்றை நிறைவு செய்து வருகின்ற ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகத்தை செய்ய திருவருளும், மேற்படி ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினரும் முடிவு செய்துள்ளனர் என்பதைப் பணிவுடன் சகல பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம். திருப்பணிகள் நிறைவுற பொதுமக்கள் தாராளமாக உதவும் வண்ணம் வேண்டுகின்றோம்.**

*— ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர்*

*புங்குடுதீவு - 7*
*16-03-2000*

(74542)

**வட்டு. மூளாய் வீதி இளைஞர் உடலுள விருத்திச் சங்கம் நடத்தும் போட்டிகள்**

**மரதன் ஓட்டம் (ஆண்கள்),**
**மாலை கட்டுதல் (பெண்கள்).**

இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் வாழும் மக்கள் அனைவரும் பங்குகொள்ளலாம்.

**விவரங்களுக்கு: ஸ்ரீ முருகன் களஞ்சியம்**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை

விண்ணப்பமுடிவு திகதி: 28-03-2000

(74573)

## நோர்வேயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிப்டன் சதுக்கத்தில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான ஜே.வி.பி. தொண்டர்கள் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

பேரணியை அடுத்து ஹைட் பார்க்கில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் அங்கு உரை நிகழ்த்தினர்.(இ-3-4)

## ஆஸி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபகரணங்களையும் இவர் வழங்குவார்.

ஆஸ்திரேலிய அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் பல மனிதாபிமான திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கிவருகிறது. இவற்றில் கண்ணி வெடி அகற்றும் திட்டமும் ஒன்றாகும்.

செல்வி காதி குலுக்மன் 25ஆம் திகதி கொழும்பு திரும்புகிறார்.

## பிரிட்டிஷ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடங்குவர்.

யாழ்ப்பாணத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளின் பணிகள் மற்றும் மூளாய், மானிப்பாய், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் பிரிட்டிஷ் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றையும் இவர் பார்வையிடுவார். யாழ். இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத் திடல் ஒன்றையும் இவர் திறந்து வைப்பார். அத்துடன் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் 99ஆம் ஆண்டுக்கான துணிச்சலான பத்திரிகை விருது (**Courageous Journalism Award**) பெற்ற உதயன் பத்திரிகையின் ஆசிரியப்பீடத்தின் சிரேஷ்ட அங்கத்தவர்களுக்கு நடத்தப்படும் நயப்பு விழாவிலும் இவர் கலந்து கொண்டு அவர்களுக்கு பதக்கங்கள் சூட்டுவார்.

செல்வி லின்டா ஜோய் டபீஸ்ட் 24ஆம் திகதி கொழும்பு திரும்புவார். (இ)


**ஈசன் கல்வி நிலையம்**
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்

*பௌதிகவியல்*
**A/L 2000**
*** மின்காந்தத தூண்டல**
திரு. குமரன் (B.Sc.)
*ஆரம்பம்: 20-03-2000*
*(திங்கள்)*
*4.30 p.m.*

(74550)


காணாமற் போனோரில்

# மேலும் மூவரின் குடும்பங்கள் மாதாந்த சம்பளம் பெறும்

கடந்த கால வன்செயல்களின் போது காணாமற்போனவர்களில் யாழ். மாநகரசபை ஊழியர்களில் மேலும் மூவரின் குடும்பங்களுக்கு அவர்களின் மாதாந்த சம்பளம் வழங்கப்படவுள்ளது.

காணாமற் போனவர்களில் 14 பேர் யாழ். மாநகரசபை ஊழியர்களாவர். இவர்களில் எட்டுப் பேரின் குடும்பங்களுக்கு ஏற்கனவே சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது.

மாநகர சபையின் பிரதிமேயர் ரவிராஜ் விடுத்த பணிப்பின் பேரில் மேலும் மூவரின் குடும்பங்களுக்கு இம்மாதம் முதல் சம்பளம் வழங்கப்படவிருக்கின்றது. (இ-3-5)

# பஸ்சேவை இன்றி மக்கள் பாதிப்பு

மண்டைதீவுக்கும் யாழ். நகரப் பகுதிக்கும் இடையே பஸ் சேவை இன்மையால் மண்டைதீவு வாசிகள் தமது தேவைகளுக்காக யாழ் நகருக்குச் செல்வதில் பலவித சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள் வெய்யிலின் மத்தியில் யாழ் நகருக்கு நடந்தே வருகின்றனர். சுமார் 4 முதல் 5 மைல்கள் தூரம் வரை இங்குள்ள மக்கள் நடந்து வரவேண்டி உள்ளது.

சில மாதங்களுக்கு முன் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதும் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் இச்சேவை நிறுத்தப்பட்டது. (ஐ-111)

## ஜா-எல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் மட்டக்களப்பு மற்றும் மலையகப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் -

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-4)

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ட்ரல் - சென். ஜோன்ஸ் அணிகளின் மோதல் தொடர்பான நேரடி வர்ணனை வானம்பாடி மற்றும் யாழ்.சேவையில் இரு தினங்களும் இடம்பெறும்.

*(இந்தப் போட்டிகள் தொடர்பான விவரங்கள் அணிகளின் படங்களுடன் 6ஆம் பக்கத்தில்.)*

## பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றின் பின்புறத்தைத் தாக்கியதாகவும் -

இதனால் அந்த பஸ்ஸில் பயணம் செய்த குற்றத்தடுப்புப் பணியகத்தின் பிரதம இன்ஸ்பெக்டர் சுமித் டீ சில்வா உட்பட 6 பேர் உயிரிழக்கவும், ஏனையோர் காயமடையவும் நேரிட்டதாகவும் மட்டக்களப்பு பொலீஸ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான பஸ் பலத்த சேதமடைந்த நிலையில் வாவிக்குள் தூக்கி எறியப்பட்டது.

வாவிக்கு அருகில் - வீதியோரமாக - கிளைமோர்க் குண்டைப் புதைத்த புலிகள் தூர இடமொன்றில் இருந்து 'றிமோட் கொன்ரோல்' மூலம் அதனை வெடிக்க வைத்திருக்கலாம் என படை வட்டாரங்களை ஆதாரம் காட்டி மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பொலீஸாரின் சடலங்கள் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் நேற்றுமாலை வைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பிரதம இன்ஸ்பெக்டர் சுமித் டீ சில்வா விசேட விசாரணை ஒன்றுக்காக கடந்த செவ்வாயன்று மட்டக்களப்புக்கு வந்திருந்தார்.

காயமடைந்த பொலீஸார் அனைவரும் நேற்றுமாலை விசேட ஹெலிகொப்டர் ஒன்றின் மூலம் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தாக்குதல் சம்பவத்தை அடுத்து மட்டக்களப்பு நகரப் பகுதியில் பதற்றநிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7-21)

## அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன, பட்டி வீரக்கோன், எம்.எச்.எம். அஷ்ரப் ஆகியோரும் -

ஐ.தே.க. தரப்பில் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரிய, காமினி அத்துகொறள, றொனி டி மெல், கே.என்.சொக்ஸி ஆகியோரும் - பங்குபற்றினர்.

கலந்துரையாடல் ஆரம்பமானதும், 'பார் ஈஸ்ட் எக்கனமிக்ஸ்ரிவியூ' என்னும் சஞ்சிகைக்கு ஜனாதிபதி அளித்த பேட்டி தொடர்பாக ஐ.தே.க. கண்டனம் தெரிவித்தது.

இருதரப்புக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

அந்தப் பேட்டி தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை ஜனாதிபதி விடுப்பதாகத் தெரிவித்தார்.

பின்னர் 1997ஆம் ஆண்டு ஐ.தே.க. சமர்ப்பித்த ஆலோசனைகள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது.

பிரஜாவுரிமை, அதிகார அலகு, ஆளுநர் நியமனம் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டன.

அதை அடுத்து அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எம்.எச்.எம்.அஷ்ரப், நாடாளுமன்ற உறுப்பினர் கே. என்.சொக்ஸி இடம் பெறுகின்றனர்.

அடுத்த சந்திப்பு எதிர்வரும் 21ஆம் இடம்பெறவுள்ளது. (இ-3)

## 29ஆம் திகதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் பயணம் செய்யபயணச் சீட்டுப் பெற்றவர்கள் முன்கூட்டியே பயணம் செய்ய வேண்டி இருப்பின் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் இடம் வழங்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-3)

## மற்றுமொரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம் காணப்படுவதற்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரமும் கிளிநொச்சி - உதயநகர் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளின் மலசலகூடக் குழிகளில் இருந்து பத்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டமை தெரிந்ததே.

## மரண அறிவித்தல்

## V.S. நவரத்தினம்

பாண்டியன்தாழ்வு பிரபல வர்த்தகரும் ருவிங்கிள் ஸ்ரார் நிறுவனங்களின் ஸ்தாபகருமான வைத்திலிங்கம் சிற்றம்பலம் நவரத்தினம் நேற்று (16.03.2000) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் பிறேமாவதி அவர்களின் அன்புக் கணவரும் வசந்தி, பாலவிநாயகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந.பாலவிநாயகர் (பாலா)
(மகன்)
ருவிங்கிள் ஸ்ரார்.

*ருவிங்கிள் ஸ்ரார்,*
*12/4 A, சந்தனமாதா கோயில்,*
*பாண்டியன்தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.*

(C/11444)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.